Registered as a NewsPaper

விலை ரூபா : 8.00

# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

பக்கங்கள்-12

நாதம் -16 திருவள்ளுவர் ஆண்டு- 2036 வைகாசி-11 25-05-2005 புதன்கிழமை ஓசை 96



கணேசா நகையகம்

தங்கநகை உலகில் தமக்கென தனியிடம் பதித்தவர்கள்

இல:123. பஜார் வீதி. வவுனியா. T.P.-024-2222464

இல:194. கஸ்தூரியார் வீதி. யாழ்ப்பாணம். T.P.-021-2225987

(சி-11750)

## புரிந்துணர்வு உடன்படிக்கையின் பின்இடம்பெற்ற தமிழர் கொலைகளைத் தடுக்க அரசு தவறிவிட்டது

### - அமெரிக்க மனித உரிமைகள் அமைப்புக் கண்டனம்

புரிந்துணர்வு உடன்படிக்கையின் பின் தமிழ்மக்கள் கொல்லப்படுவதைத் தடுக்க சிறிலங்கா அரசு தவறிவிட்டது என அமெரிக்க மனித உரிமைகள் அமைப்பொன்று குற்றம்சாட்டியுள்ளது.

சிறிலங்கா அரசாங்கத்துக்கும், தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையில், புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டதன் பின்னர், 200இற்கும் அதிகமான அப்பாவித் தமிழர்கள் கொல்லப்பட்டுள்ளதாக அமெரிக்காவின் நியூயோர்க்கைத் தளமாகக் கொண்டியங்கும் ஹியூமன் வொச் எனப்படும் மனித உரிமைகள் அமைப்பு சுட்டிக்காட்டியுள்ளது.

இந்த நிலைமைகள் தொடர்பில் சிறிலங்கா அரசாங்கம் எந்தவித நடவடிக்கைகளையும் மேற்கொள்ளவில்லையெனத் தெரிவித்துள்ள மனித உரிமைகள் அமைப்பு, குற்றவாளிகளை இனங்கண்டு அவர்கள் தொடர்பில் நடவடிக்கையெடுப்பதற்கு அரசாங்கம் தவறிவிட்டதாகவும் குற்றஞ்சாட்டியுள்ளது

இந்தக் குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் கருத்து வெளியிட்டுள்ள சிறிலங்கா சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ரியன்சி பெரேரா, அரச படைகளின் கட்டுப்பாட்டுப் பகுதியில் இடம்பெறும் கொலைச் சம்பவங்கள் தொடர்பாகச் சாட்சியமளிப்பதற்குபொதுமக்கள் முன்வருவதில்லையெனவும், தமிழீழ விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியில் மோதல்கள் அல்லது துப்பாக்கிச் சூட்டுச்

(12ஆம் பக்கம் பார்க்க)

# தென்மராட்சியில் இராணுவ ஆக்கிரமிப்பை அகற்றி மக்களை மீள் குடியமர்த்த தொடர்போராட்டம்

## நேற்றைய மாநாட்டில் தீர்மானம்

(யாழ்ப்பாணம்)

**யாழ்.தென்மராட்சிப் பிரதேச மக்கள் தமது வாழ்விடங்களை ஆக்கிரமித்துள்ள இராணுவ அதியுயர் பாதுகாப்பு வலயங்களை அகற்றி அப்பகுதிகளில் தம்மை மீளக்குடியமர அனுமதிக்கக்கோரி தொடர் போராட்டங்களை நடத்தவுள்ளனர். அத்தோடு இதற்கென விசேட செயலணிக்குழுவொன்றும் அமைக்கப்பட்டுள்ளது.**


வீதிமறிப்புப் போராட்டங்களாகவும், உண்ணாவிரதப் போராட்டங்களாகவும் தம் கோரிக்கைகளை வலியுறுத்தப் போராட்டங்களை நடத்துவதற்கு தென்மராட்சி மக்கள் தீர்மானித்துள்ளனர்.


இப் போராட்டங்களை எதிர்வரும் மாதம் 11 ஆம் திகதி தொடக்கம் நடத்துவது என்றும் முடிவு செய்யப்பட்டுள்ளது.

தமது கோரிக்கைகள் நிறைவேற்றப்படாத பட்சத்தில் போராட்டங்கள் முன்னெடுக்க முடிவு செய்யப்பட்டது.

ஜுன் மாதம் 11 ஆம் திகதி ஆரம்பமாகும் இப்போராட்டம் கண்டி வீதியை வழிமறித்து ஒருமணிநேர வீதிமறியல் போராட்டமாக இடம் பெற்று தொடர்ந்து வரும் நாட்களில்

(12ஆம் பக்கம் பார்க்க)





## திருமலையில் படையினரின் அச்சுறுத்தல்; விடுதலைப் புலிகள் பலத்த கண்டனம்!

### - போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவிற்கும் முறைப்பாடு

(திருமலை)

திருமலையில் விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் போராளியொருவரும் மற்றும் அவரது உதவியாளரான பொதுமகனும் நேற்றைய தினம் சிறிலங்காப் படையினரால் கடுமையாக அச்சுறுத்தப்பட்டுள்ளனர். இது குறித்து மாவட்ட போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவிடம் விடுதலைப்புலிகள் கடும் கண்டனத்தைத் தெரிவித்துள்ளனர்.

போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவிற்கு நேற்று விடுதலைப்புலிகள் அனுப்பிவைத்த கண்டன அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது.

செவ்வாய் மதியம் எமது அலுவலகத்திலிருந்து குபேரன் என்னும் அமைப்புப் பெயரையுடைய துறைசார்ந்த பொறுப்பாளரும் அவரது

(12ஆம் பக்கம் பார்க்க)

## திருமலையில் பாதுகாப்பிற்காக மக்கள் அயல் கிராமங்களுக்கு இடம்பெயர்வு

(திருமலை)

திருகோணமலை நகரின் திருக்கடலூர் மற்றும் கிருஸ்ணாபுரி கிராமங்களில் கடந்த சில தினங்களாக இடம்பெற்ற குண்டுவீச்சுச் சம்பவங்களின் விளைவாக அச்சமுற்ற கிராமவாசிகள் பாதுகாப்புத் தேடி தங்களது கிராமங்களிலிருந்து இடம் பெயர்ந்து உவர்மலை,சல்லி, செல்வநாயகபுரம் போன்ற பகுதிகளில் தஞ்சமடைந்துள்ளனர்.

சுனாமிப்பேரலைகளின் தாக்கத்தினால் தங்களது வீடுகளையும், மீன்பிடிப்படகுகளையும் இழந்த இந்தக் கிராம வாசிகள் மீண்டும்தங்களது வாழ்வினை இயல்பு நிலைக்குக் கொண்டுவரும் வேளை குண்டுவீச்சு சம்பவம் இவர்களது எதிர்கால நம்பிக்கைகளை மீண்டும் சோதனைக்கு ஆளாக்கியுள்ளது.

இதேவேளை நேற்று விடுமுறை நாளானபோதும் நகரிலுள்ள வர்த்தக நிலையங்கள் திறந்திருந்தன. நகர்ப்புற வாசிகள் மட்டுமன்றி மாவட்டத்தின் ஏனைய பகுதிகளையும் சேர்ந்த மக்களும் நகரப்பகுதிக்கு வந்து தமக்கான பொருட்களைக் கொள்வனவு செய்தனர்.

## இலங்கையின் புனரமைப்புப் பணிகள் குறித்து சர்வதேச நாடுகள், நீதி நிறுவனங்கள் அதிருப்தி

### - உலக வங்கியின் பிரதித் தலைவர் கருத்து

(கொழும்பு)

இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளும் சர்வதேச நிதி நிறுவனங்களும் இலங்கையில் மேற்கொள்ளப்படும் புனரமைப்புப் பணிகள் குறித்து அதிருப்தி கொண்டுள்ளதாக உலக வங்கியின் பிரதித் தலைவர் பட்டேல் தெரிவித்துள்ளார்.கண்டியில் நடைபெற்ற இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் மாநாட்டில் கலந்து கொண்ட பட்டேல் அண்மையில் சர்வதேச ஊடகம் ஒன்றிற்கு வழங்கிய செவ்வியில் இந்தக் கருத்தை வெளியிட்டுள்ளார்.

இலங்கைக்கு உதவியளிக்கப்பட்ட நிதியுதவிகள் வழங்கப்படுவது தாமதமடையும் நிலை ஏற்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

(12ஆம் பக்கம் பார்க்க)

## கட்டளை அதிகாரியாக புதியவர் நியமனம்

(கொழும்பு)

மட்டக்களப்பிற்கான சிறிலங்கா இராணுவத்தின் கட்டளைத் தளபதியாக பிரிகேடியர் எல். பி. ஆர். மார்க் பொறுப்பேற்றுள்ளார். யாழ்ப்பாணம், குருவிட்ட, மாதுறு ஓயா பகுதிகளில் இவர் முன்பு படைஅதிகாரியாகக் கடமையாற்றியவர் எனத் தெரிவிக்கப்படுகிறது. இவருக்கு முன்பு பிரிகே

(12ஆம் பக்கம் பார்க்க)

## மன்னம்பிட்டியில் இளம் குடும்பஸ்தர் இனந்தெரியாதோரால் சுட்டுக்கொலை

பொலநறுவை மாவட்டம் மன்னம்பிட்டியில் இளம் குடும்பஸ்தரொருவர் நேற்று முன்தினம் இரவு இனந்தெரியாத நபர்களினால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார். 25 வயதுடைய .நாகப்பன் சிவராசா என அடையாளம் காணப்பட்டுள்ள இவர், மூன்று குழந்தைகளின் தந்தையாவார்.தேநீர் கடையொன்றில் தொழில் பார்க்கும் இவர், வாடிக்கையாளர்களுக்கு கொத்து ரொட்டி தயாரித்துக்கொண்டிருந்த சமயம் அங்கு சென்ற மூன்று இனந்தெரியாத நபர்கள் இவர் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்ததாக கூறப்படுகின்றது. முன்னர் விடுதலைப்புலிகள் அமைப்பில் உறுப்பினராக இருந்த இவர், போர் நிறுத்த உடன்படிக்கைக்கு முன்னதாக அதிலிருந்து விலகியவர் எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன. இதேவேளை மட்டக்களப்பு மாவட்டத்தில் இவ்வருடம் 25 பேர்வரை கொல்லப்பட்டும், 15 பேர்வரை காயமடைந்தும் இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (32)

## வரி விளம்பரம்


**விற்பனைக்குண்டு**

காணி விற்பனைக்குண்டு. இல 49, அண்ணாவீதி, ஆனந்தபுரம், கிளிநொச்சியில். தொடர்பு கொள்ளவும். தகவல் M.கலாவாணி, (ஈஸ்வரி) (5927)

**இலவசக் கருத்தரங்கு**

முல்லை மாவட்ட அரங்க செயற்பாட்டுக்குழுவினரின் ஒழுங்குபடுத்தலின்கீழ் 2005 பரீட்சையிலே தோற்றவிருக்கும் கலைப்பிரிவு மாணவர்களுக்கான தமிழ் புவியியல் பாடங்களுக்கான வழிகாட்டல் கருத்தரங்கு எதிர்வரும் 26.05.2005, 27.05.2005 ஆகிய நாட்களில் நடைபெறவுள்ளது. (6156)

**தவறிவிட்டது**

ஆ.சதிஷ் என்பவரது தேசியஅடையாள அட்டையும் (791025265-V) பயண அனுமதிஅட்டையும்,பேஸ் உடன் வட்டுவாகல் பாலத்திற்கும், கிளிநொச்சிக்குமிடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் கிளிநொச்சி காவல் பணிமனையில் அல்லது ஈழநாதம் பணிமனையில் ஒப்படைக்கவும். (சி.12013)


# பேரினவாதிகளின் ஏமாற்று வித்தைக்கு ஏமாற ஈழத்தமிழன் தயாரில்லை

### -பாரதிபுரம் கிராம தே.எ.பே. செயலர்

(அலுவலக செய்தியாளர்)

தமிழீழ மக்கள் சிங்களப் பேரினவாதிகளின் திட்டமிட்ட நயவஞ்சகத்தினால் காலம் காலமாக ஏமாற்றப்பட்டு வருவதை இன்று சர்வதேச சமூகம் உணர்ந்து கொண்டுள்ளது.

இந்த விடயத்தில் தமிழ்மக்களும் விழிப்படைந்துவிட்டனர்.இனியும் சிங்களப் பேரினவாதிகளின் ஏமாற்று வித்தைக்கு ஏமாளியாவதற்கு எந்தவொரு ஈழத்தமிழனும் தயாரில்லை என்பதனை வெளியுலகுக்கு எடுத்தியம்ப மக்கள் தயாராகி விட்டனர் என பாரதிபுரம் கிராம தேசிய எழுச்சிப் பேரவைச்செயலர் தெரிவித்துள்ளார்.

நேற்று கிளிநொச்சி பாரதி வித்தியாலயத்தில் நடைபெற்ற பாரதிபுரம் கிராமமக்கள் மற்றும் தேசிய எழுச்சிப் பேரவை மற்றும் கிராம அபிவிருத்திக் குழுக்களுடனான சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

பாரதிபுரம் கிராமத்தில் நடத்தப்படவுள்ள வீரமுரசு நிகழ்வில் இம் மக்கள் ஒட்டுமொத்தமாக தமது எழுச்சியை வெளிப்படுத்தவுள்ளனர். எனவும் அவர் தெரிவித்தார்.

பாரதிபுரம் கிராம ஊரகவளர்ச்சிப் பொறுப்பாளர் ஈழவன் தலைமையில் நேற்றுப் பிற்பகல் 4.30 மணிக்கு நடைபெற்ற மேற்படி நிகழ்வில் கிளிநொச்சி கோட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் சிறி, கிளிநொச்சி பிரதேச பொறுப்பாளர் போர்ப்பிரியன் ஆகியோர் கலந்து கொண்டு கருத்துரை வழங்கினர்.

பெருந்திரளான மக்கள் மேற்படி நிகழ்வில் உணர்வெழுச்சியுடன் கலந்துகொண்டு தங்கள் கருத்துக்களை வெளிப்படுத்தியமை குறிப்பிடத்தக்கது. (சோ)

# மன்னார் மாவட்டத்தில் நீர் விநியோக அபிவிருத்தி

மன்னார் மாவட்டத்தில் நீர் விநியோகம் அபிவிருத்தித் திட்டத்துக்கென இரண்டு கோடி 60 இலட்சம் ரூபாவை புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சு வழங்கியுள்ளது.

டென்மார்க் அரசின் நிதியுதவியுடன் ஐக்கிய நாடுகள் தூதுவராலயமூடாக இந் நிதி வழங்கப்பட்டுள்ளது.

கடந்த போர்க் காலத்தில் சேதமுற்ற மாந்தை மேற்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவில் உள்ள தேவன்பிட்டி, வெள்ளாங்குளம் விடத்தல்தீவு போன்ற கிராமங்களுக்கு இந்த நீர் விநியோகத்திட்டம் வழங்கப்பட்டவுள்ளது.

தேசிய நீர் வழங்கல் அதிகார சபையினரால் இதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இப்பகுதியில் உள்ள இந்தியாவிலிருந்து மீள்குடியமர்ந்த பல குடும்பங்கள் இதனால் பயன் பெறவுள்ளன. (18)

## றகைகளைத் தவறவிட்டவர் தொடர்பு கொள்ளவும்

புதுக்குடியிருப்பு துர்க்கா வீதிக்கும் பியூஸ்காரச்சிக்கும் இடைப்பட்ட வீதியில் கைச்சங்கிலி ஒன்றும், சிமிக்கி ஒன்றும் தீபா என்பவரால் கண்டு எடுக்கப்பட்டுள்ளது. இதற்கு உரியவர் தகுந்த ஆதாரத்துடன் ஈழநாதம் புதுக்குடியிருப்புப் பணிமனையில் தொடர்பு கொள்ளவும்.

## 86வீதமானோர் பாதிப்பு

யாழ்ப்பாணத்தில் உயர் பாதுகாப்பு வலயமாக இருப்பதன் காரணமாக சுமார் 86 சதவீதமானோருக்குபாதிப்புஏற்பட்டுள்ளது. சுயமாகஇவர்கள்தமது காணிக்குச் செல்லவோ சுயமாக அதில் இருந்து வெளியேறவோ முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது யாழ்ப்பாணத்தில் கண்ணிவெடிகளின் ஆபத்தும் இதற்கான காரணமாக அமைந்துள்ளது.

கிளிநொச்சி மாவட்டத் தில் மாத்திரம் 28 சதவீதமான காணிகள் அதியுயர் பாதுகாப்பு வலயமாக வரையறுக்கப் பட்டுள்ளது.

அதேவேளை கிளிநொச்சியின் 4.7 வீதக் காணிகளில் கண்ணிவெடி ஆபத்து நிறைந்துள்ளதாகவும் தெரிவிக்கப் படுகின்றது.

# கிளிநொச்சி மாவட்டத்தில் பாம்புக்கடி அதிகரிப்பு

### -ஒருவர் மரணம்-

(அலுவலக செய்தியாளர்)

கிளிநொச்சி மாவட்டத்தில் பாம்புக்கடிக்குள்ளாவோரின் தொகை கடந்த வாரம் முதல் அதிகரித்துள்ளதாகத் தெரியவந்துள்ளது.

கிளிநொச்சி மாவட்ட வைததியசாலையில் கடந்த வாரம் முதல் தினசரி ஐந்திற்கும் மேற்பட்டவர்கள் பாம்புக்கடிக்குள்ளாகி கிளி.மாவட்ட வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுள்ளதனை வைத்தியசாலைக் குறிப்பேட்டின் மூலம் தெரியவந்துள்ளது.

நேற்று முன்தினம் கிளிநொச்சி ஐந்தாம் வாய்க்காலைச் சேர்ந்த செ.தவமணி (வயது-46) என்ற குடும்பப் பெண்மணி பாம்புக்கடிக்குள்ளான நிலையில் கிளி.மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பலனளிக்காத நிலையில் நேற்றைய தினம் மரணமாகியுள்ளார்.

நேற்றுமாலை 6.30 மணியளவில் கிளிநொச்சி செல்வா நகரைச் சேர்ந்த க.தர்சினி (வயது-09) என்ற சிறுமி பாம்புக்கடிக்குள்ளாகிய நிலையில் கிளி.மாவட்ட வைத்தியசாலைக்கு எடுத்துவரப்பட்டு சிகிச்சை மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

கடந்த வாரம் முதல் பாம்புக்கடிக்குள்ளாகி கிளி.மாவட்ட வைத்தியசாலையில் தினமும் சிகிச்சைக்குஅனுமதிக்கப்படடு வருபவர்களின் தொகை அதிகரித்துவருவதாகவும் குறிப்பாக மாலை நேரத்தில் பாம்புக்கடிக்குள்ளானவர்களே கூடுதலாகக் காணப்பட்டுள்ளதாக வைத்தியசாலை வட்டாரத்தினர் தெரிவித்துள்ளனர். (சோ)

## உடையார்கட்டு சந்தையில் மலசலகூடவசதி இல்லை

உடையார்கட்டு பொதுச் சந்தைப் பகுதிக்கு மலசல கூட வசதி செய்து தரப்பட வேண்டும் எனப் பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

பெருமளவான வர்த்தக நிலையங்களையும்,சந்தை வியாபாரிகளையும் கொண்ட இச் சந்தைக்கு அதிகளவான நுகர்வோர் வந்து செல்கின்றனர்.

இதனால் தமது அடிப்படைத் தேவையை நிறைவு செய்வதில் இவர்கள் சிரமங்களை எதிர் கொண்டுள்ளனர்.

எனவே சம்பந்தப்பட்டோர் இவ் விடயத்தில் கவனம் செலுத்தி நடவடிக்கை எடுக்க வேண்டுமெனப் பாதிக்கப்பட்டோர் கோரிக்கை விடுத்துள்ளனர். (19)

# போக்குவரத்தில் பயணிகளுக்கு சிரமம்; நடவடிக்கையெடுக்கும்படி கோரிக்கை

(நமது நிருபர்)

கிளிநொச்சி பேருந்து நிலையத்திலிருந்து சேவியர் கடைச் சந்தி, செல்வாநகர் துயிலும் இல்லத்தடி, முறிப்பு போன்ற பகுதிகளுக்குப் பயணம் செய்வோரும் அப்பகுதிகளிலிருந்து கிளிநொச்சி நகருக்கு வருவோரும் தமது பயணத்தினை மேற்கொள்வதில் பெரும் சிரமங்களை எதிர்கொண்டுள்ளனர்.

இவ்வீதியூடாகச் செல்லும் வாகனங்கள் கந்தபுரம் மற்றும் அதற்கும் அப்பாலுள்ள பயணிகளை மட்டுமே ஏற்றிச்செல்கின்றன.

இதனால் இப்பகுதி மக்கள் தமது தேவைகளையும்,அலுவலகப் பணிகளையும் மேற்கொள்வதில் பெரும் சிரமங்களை எதிர்கொண்டுள்ளனர்.

மிகக்குறைந்தளவு பேருந்துகளே இவ் வீதியூடாக சேவையில் ஈடுபடுகின்றன. இதனால் பல மணி நேரமாக பயணிகள் பேருந்திற்காக காத்து நிற்கும் அதேவேளை நடத்துநர்களின் இவ்வாறன செய்பாடுகளால் பெரிதும் பாதிக்கப்பட்டு தமது பணிகளை நிறைவு செய்யமுடியாத நிலைக்கு தள்ளப்படுகின்றனர்.

இப்பகுதியூடாக சேவையிலீடுபடும் தனியார் சிற்றூர்திகளே இவ்வாறான நடவடிக்கையில் ஈடுபடுவதையும் அவதானிக்க முடிகின்றது.

சம்பந்தப்பட்டோர் இவ்விடயத்தில் கவனம் செலுத்தி பயணிகளின் குறைதீர நடவடிக்கை யெடுக்க வேண்டும் என கோரப்பட்டுள்ளது.


# சந்தோசம்-03 அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பு முடிவுகள்

**சமுதாய முன்னேற்ற நிலையத்தினரால் நலிவுற்றோர் நலன் வாழ்வுத்திட்டத்தின் நிதிக்காக நடத்தப்பட்ட சந்தோசம்-03 அதிஸ்டலாபச் சீட்டிழுப்பு முடிவுகள்.**

| | | |
|---|---|---|
| 01. | 01 ஆம் பரிசுக்குரிய இலக்கம் | 1201 |
| 02. | 02 ஆம் பரிசுக்குரிய இலக்கம் | 2154 |
| 03. | 03 ஆம் பரிசுக்குரிய இலக்கம் | 10132 |

*** 10 ஆறுதல் பரிசுக்குரிய இலக்கங்கள்.**

| | | | |
|---|---|---|---|
| 01ஆம் | 3690 | 6ஆம், | 4625 |
| 02ஆம் | 12405 | 7ஆம், | 234 |
| 03ஆம் | 5464 | 8ஆம், | 2176 |
| 04ஆம் | 11416 | 9ஆம், | 262 |
| 05,ஆம் | 10032 | 10ஆம், | 5294 |

**குறிப்பு: மேற்படி பரிசுக்குரியவர்கள் தங்கள் இலக்கங்களை நேரில் உறுதிப்படுத்தி 24.07.2005 இற்கு முன் பெற்றுக்கொள்ளும்படி அன்பாகக் கேட்டுக் கொள்கின்றோம்.**

'நன்றி'

தொடர்பு கொள்ளும் இடம்:
சமுதாய முன்னேற்ற நிலையம்,
தலைமைச்செயலகம்,
ஜெயந்திநகர்,
கிளிநொச்சி.

(சி 12011)


## நிலைப்பாட்டில் உறுதி

(கொழும்பு)

ஜப்பான் அரசின் அழைப்பின் பேரில் குறுகிய பயணமொன்றினை மேற்கொண்டு ஜப்பான் சென்றிருந்த ஜே.வி.பி தலைவர்கள் அடங்கிய தூதுக்குழு தமது நிலைப்பாட்டில் உறுதியாகவே உள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. பொதுக்கட்டமைப்பு என்பது புலிகள் தங்களை வலுப்படுத்தி கொள்வதற்காக மேற்கொண்டுள்ள திட்டமாகும். இதன் மூலம் தமது படைப்பலத்தை விரிவுபடுத்தவும் ஆயுத தளபாடங்களை வாங்கி குவிப்பதற்கு மேற்கொள்ளும் தந்திரோபாய நடவடிக்கையாகும். எனத் தெரிவித்துள்ள அந்தக் குழுவினர் தமது கட்சி எந்தவொரு கட்டத்திலும் அதனை ஏற்றுக்கொள்ளாது என ஜப்பானில் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் தெரிவித்துள்ளனர்.(32)

## ஒப்பந்தத்திற்கு தீவிர முயற்சி

சிறிலங்காவிற்கும், இந்தியாவிற்கும் இடையிலான உத்தேச பாதுகாப்பு உடன்படிக்கையைக் கைச்சாத்திடாமல் இழுபறி நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கும் நிலையில் முதலீடுகள், சேவைகள் தொடர்பாக புதுடில்லியுடன் விரிவான புதியதொரு உடன்படிக்கையை மேற்கொள்வதற்கான முயற்சிகளில் கொழும்பு ஈடுபட்டு வருகின்றது. இவ்வருட இறுதிக்குள் முதலீடுகள், சேவைகள் தொடர்பாக இந்தியாவுடன் பரந்து பட்ட உடன்படிக்கை ஒன்றை சிறிலங்கா மேற்கொள்ளும் என முதலீட்டுச் சபையின் தலைவர் சாலிக விக்கிரம சூரிய ஞாயிற்றுக் கிழமை கர்நாடக மாநிலத்தில் தலைநகர் பெங்களூரில் தெரிவித்துள்ளார்.


# முக்கிய அறிவித்தல்

லக்சுமிபதி வல்வெட்டித்துறையைச் சேர்ந்த கணேசலிங்கம் சுதாயினி என்பவரது O/Lபெறுபேற்று சான்றிதழ்,A/L பெறுபேற்றுசான்றிதழ் யாழ். கண்டி,தாய்லாந்து பல்கலைக்கழகசான்றிதழ்கள், கணினிச்சான்றிதழ் என்பன சூட்கேஸ்ஒன்றுடன்பளை சோதனைச்சாவடிக்கும், முறிகண்டிக்கும் இடையில்சனிக்கிழமை (21.05) தவறிவிட்டது. இதனைக் கண்டெடுத்தவர்கள் ஈழநாதம் பணிமனையில் அல்லது புலிகளின் குரல் நடுவப்பணியகத்தில் ஒப்படைக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம். தகுந்த சன்மானம் வழங்கப்படும். (6201)

55ஆவது ஆண்டில்...

## ராஜு ஸ்ரோர்ஸ் ஸ்தாபனம்

67,69,கஸ்தூரியார் வீதி,யாழ்ப்பாணம்.
தொ.பே:021 - 222 5224

**எமது வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.**

WESTERN UNION மணி டிரான்ஸ்ஃபர்

மூலமாக பணம் மாற்றும் வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் எமது தனிப்பட்ட அன்பளிப்புகள் வழங்கப்படும்.

welcome so much choice
Raju Stores-Jaffna.

(சி-12118)

55ஆவது ஆண்டில்...

யாழ்ப்பாணம்



# அனாமதேய செய்திகள் பிரசுரிப்பதில் "நியூஸ் வீக்" ஆசிரியர் குழு திடீர் முடிவு

(வோஷிங்டன்)


**குவான்டனாமோ சிறையில் இஸ்லாமிய புனித நூலான குர்ஆன் அவமதிக்கப்பட்டதாகத் தவறான தகவல் வெளியிட்ட 'நியூஸ் வீக்' பத்திரிகை இனிமேல் இது போன்ற அனாமதேய செய்திகளுக்கு ஆசிரியர் குழுவிடம் ஒப்புதல் பெற்ற பின்னரே வெளியிடப்படும் என்று அறிவித்துள்ளது.**

கியூபா அருகே குவான்டனாமோ சிறையுள்ளது. அமெரிக்க இராணுவத்தின் கட்டுப்பாட்டிலுள்ள இச்சிறையில் இஸ்லாமியர்களின் புனித நூலான குர்ஆனை கழிவறையில் வீசி அமெரிக்கப் படையினர் அவமதித்ததாக பிரபல 'நியூஸ் வீக்' பத்திரிகை செய்தி வெளியிட்டது.

ஈராக் மீது போர் தொடுத்தது. அபுகிராய் சிறையில் கைதிகள் சித்திரவதை செய்யப்பட்டது ஆகியவற்றால் ஏற்கனவே கொந்தளிப்பிலுள்ள முஸ்லிம் நாடுகள் இந்தச் செய்தியால் இன்னும் கொதித்துப்போயுள்ளது. உலகம் முழுவதும் முஸ்லிம் நாடுகளிலும், மற்ற நாடுகளிலும் அமெரிக்காவைக் கண்டித்து முஸ்லிம்கள் போராட்டம் நடத்திக் கொண்டிருக்கின்றனர்.

அமெரிக்க இராணுவ தலைமையகமான பென்டகன் இச்செய்தி குறித்து விசாரித்து அதில் உண்மை இல்லை என்று அறிவித்தது. அனாமதேய தகவல் மூலம் இச் செய்தி கிடைத்ததாகவும், அது தவறான செய்தியாகிவிட்டதாகவும், 'நியூஸ் வீக்' பத்திரிகை விளக்கமளித்தது. மேலும் அது போன்ற அனாமதேய வட்டாரங்களில் கிடைக்கும் செய்திகளை வெளியிடுவதில் முக்கிய முடிவும் எடுத்துள்ளது.

ஆசிரியர், நிர்வாக ஆசிரியர் மற்றும் இதர மூத்த ஆசிரியர்களிடம் ஒப்புதல் பெறப்பட்ட பின்னரே இனிமேல் இப்படிப்பட்ட செய்திகள் வெளியிடப்படும் என்று அறிவித்துள்ளது. 'நியூஸ் வீக்' தலைவரும், தலைமை ஆசிரியருமான ரிச்சர்ட்ஸ்மித் ஆசிரியர் பக்கத்தில் எழுதியுள்ள கட்டுரையில் இத்தகவலைத் தெரிவித்துள்ளார்.



அமெரிக்காவால் விண்ணுக்கு ஏவப்படவிருந்த டிஸ்கவரி ரொக்கெட் மீண்டும் பழுதுபட்டதால் அதன் பயணம் மேலும் சில நாட்களுக்குத் தடைப்பட்டுள்ளது ஏவு தளத்தில் டிஸ்கவரி ரொக்கெட்





ஈராக்கின் பாக்தாத்தில் சியா முஸ்லீம்களின் கட்டுப்பாட்டுப்பகுதியில் நடைபெற்ற குண்டுத்தாக்குதலில் எரிந்த வாகனம் ஒன்றினருகில் நிற்கும் அமெரிக்கப்படைச் சிப்பாயையும், சியா முஸ்லிம் பள்ளிவாசலில் குண்டு வெடித்த இடத்தை அவதானிக்கும் மக்களையும் படங்களில் காணலாம்.

## ஈராக்கில் தீவிரவாதிகள் தாக்குதல் பிரதமரின் ஆலோசகர் உட்பட 50 பேர் பலி

(பாக்தாத்)

ஈராக்கில் தீவிரவாதிகள் நடத்திய தாக்குதலில் பிரதமர் இப்ராகிம் ஜபாரியின் ஆலோசகர் உட்பட 50 பேர் பலியாகியுள்ளனர்.


ஈராக்கில் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளைக் கொண்டு மக்கள் ஆட்சி நடந்து வருகிறது. பிரதமராக இப்ராகிம் ஜபாரி இருந்து வருகிறார். மக்களால் தேர்ந்தெடுக் கப்பட்ட அரசாங்கம் நிலைத்து நின்றுவிடக்கூடாது என்பதில் தீவிரமாக இருக்கும் தீவிரவாதிகள் புதிய அரசு பதவி ஏற்றது முதல் தீவிரவாதிகள் தாக்குதலை அதிகரித்துள்ளனர்.

தஸ்குர்மாட்டு நகரில் குர்திஸ்தான் கட்சிப் பிரமுகர்கள் சென்ற கார்களுக்கு அருகே கார்க்குண்டு வெடித்தது இதில் 5 பேர் பலியானார்கள்; 18 பேர் காயமடைந்தனர்.

சதாம் ஹூசைன் பிறந்த நகரான திக்ரிட் அருகே கார்க்குண்டு வெடித்ததில் அமெரிக்க வீரர் ஒருவர் பலியானார்.

2003 ஆம் ஆண்டு மார்ச் மாதம் ஈராக் போர் தொடங்கியது முதல் 1,628 அமெரிக்க வீரர்கள் ஈராக்கில் பலியாகியுள்ளனர்.

பாக்தாத் நகரில் ஒரு உல்லாச விடுதியில் பகல் உணவு நேரத்தின்போது குண்டு வெடித்ததில் 50 பேர் பலியாகியிருக்கலாம் என்று கூறப்படுகிறது.



நேற்று பாக்தாத்திலுள்ள பிரபல பெண்கள் கல்லூரிக்கு அண்மையில் கிறிஸ்தவர்கள் செறிந்துவாழும் பகுதியில் ஆறு பேர் பலியான கார் குண்டு தாக்குதல நடைபெற்ற இடத்தை கடந்து செல்லும் அமெரிக்க படையினரின் டாங்கி ஒன்று

## அமெரிக்க விமான ஓட்டியைக் கொன்றுவிட்டோம் அல்-குவைதா அமைப்பு பரபரப்பு தகவல்

(டுபாய்)

ஈராக்கில் அமெரிக்க விமான ஓட்டி ஒருவரை கொன்றுவிட்டோம். ஓட்டி பற்றிய தகவல் இணையதளத்தில் வெளியிடப்பட்டுள்ளது என அமெரிக்காவைக் கலக்கியுள்ளது அல்-குவைதா தீவிரவாத அமைப்பு.

அல்-குவைதா தீவிரவாத அமைப்பிற்கு ஆதரவாக இணையதளம் ஒன்று அவ்வப்போது பரபரப்பான செய்திகளை வெளியிடும். ஆனால், செய்தியின் நம்பகத்தன்மை கேள்விக்குறியாக இருக்கும். இதுபோன்ற ஒரு செய்தி சமீபத்திலும் வெளியிடப்பட்டது.

அதில் அமெரிக்கப் படைகள் ஈராக்கை முற்றுகையிட்டு தாக்குதல் நடத்தின. அப்போது பாக்தாத்தில் உள்ள மசூதிகள் மற்றும் உல்லாச விடுதிகள் மீதும் தாக்குதல் நடத்தப்பட்டது. இதில், அமெரிக்க ஓட்டுநர் ஒருவர் முக்கிய பங்கு வகித்தார். அவரை கடத்திக் கொலை செய்துள்ளோம். அவரது பெயர் நீகஸ்கொஷாபா. அவரது தலைமுடி சாம்பல் நிறமுடையது. கடவுள் எங்களுக்கு இட்ட ஆணைப்படி அவரைக கொன்றோம் எனக் கூறப்பட்டுள்ளது.

இது குறித்து அமெரிக்க இராணுவ செய்தித் தொடர்பாளர் கூறுகையில், கடந்த 24 மணி நேரத்திற்குள் எந்த விமானமும் சுட்டு வீழ்த்தப்படவில்லை. அதுபோல், எந்த விமான ஓட்டியும் காணாமற்போனதாகத் தகவல் இல்லை என்றார்.

### 73 பேர் உயிரிழப்புக்குக் காரணமானவரை ஒப்படைக்குமாறு வெனிசுலா கோரிக்கை

கியூபா விமானத்தைத் தகர்த்ததன் மூலம் 73 பேர் பலியாவதற்குக் காரணமாக இருந்த லூயிஸ் பொசாடா கேரிலஸ்சை உடனடியாக எங்களிடம் ஒப்படைக்க வேண்டும் என்று வெனிசுலா அதிபர் ஹியூகோ சாவெஸ் கோரியுள்ளார்.

கைதிகளை ஒப்படைப்பதற்கான ஒப்பந்தத்தின் அடிப்படையில் கேரிலஸ் எங்களிடம் ஒப்படைக்கப்பட வேண்டும் இல்லாவிட்டால் அமெரிக்காவுடனான உறவை மறுபரிசிலனை செய்வோம் என்றும் அவர் எச்சரித்தார். கேரிலஸ் இரண்டு மாதங்களுக்கு முன்புதான் மெக்சிக்கோவிலிருந்து அமெரிக்காவுக்கு ஓடி வந்தார். அரசியல் அடைக்கலம் கேட்டார். கடந்த வாரம் அவர் கைதானார்.


### பத்திரிகை சுதந்திரத்தைப் பறிக்கும் நேபாள மன்னரின் புதிய சட்டம்

(காத்மண்டு)

பத்திரிகைகளின் குரல்வளையை நெரிக்கும் வகையில் நேபாள மன்னர் ஆட்சி புதிய சட்டத்தைக் கொண்டுவந்துள்ளார்.

நேபாளத்தில் நெருக்கடி நிலை இரத்துச் செய்யப்பட்டுவிட்ட நிலையிலும் பத்திரிகை சுதந்திரத்தைக் குலைக்கும் வகையில் புதிய சட்டம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

மன்னர் ஞானேந்திரா மற்றும் அவரது குடும்ப உறுப்பினர்களுக்கு எதிராக வெறுப்பூட்டும் வகையிலோ அல்லது மரியாதைக் குறைவாகவோ செய்திகள் வெளியாவதைத் தடுக்கும் வகையில் இச் சட்டம் இயற்றப்பட்டுள்ளது.



நேற்று முன்தினம் வெள்ளை மாளிகையில் அமெரிக்க அதிபர் ஜோர்ஜ் புஷ்சும் ஆப்கானிஸ்தான் அதிபர் ஹமிட் கர்சாய் இருவரும் இணைந்து நடத்திய செய்தியாளர் மாநாட்டில் ஒரு பகுதி.

## வங்கதேசத்தில் சூறாவளி 15 பேர் பலி; பலர் படுகாயம்

(டாக்கா)

வங்கதேசத்தில் நேற்று முன்தினம் வீசிய கடும் சூறாவளியால் 15 பேர் உயிரிழந்தனர். நூற்றுக்கும் மேற்பட்டவர்கள் காயமடைந்துள்ளனர்.

ஆயிரக்கணக்கான வீடுகள் சேதமடைந்தன. ஏராளமான மின்சாரக் கம்பங்கள் முறிந்துவிழுந்தன.

இறந்தவர்களில் பெரும்பாலானவர்கள் மின்னல் தாக்கியதால்தான் உயிரிழந்துள்ளனர். மரங்கள் விழுந்தபோதும், மின்சாரக் கம்பங்கள் சாய்ந்து விழுந்தபோதும் அருகில் இருந்தவர்கள் பலத்த காயமடைந்துள்ளனர்.

காக்ஸ் பஜார் என்ற இடத்தில் வயலில் நெல் அறுவடையில் ஈடுபட்டிருந்தபோது மின்னல் தாக்கி எட்டுக் கிராமவாசிகள் இறந்தனர்.

சூறாவளியில் சிக்கி வீட்டுக்கூரைகள் பறந்ததாலும், வீடுகள் கீழே விழுந்து சரிந்ததாலும் 1,500இற்கும் மேற்பட்டோர் வீடுகளை இழந்தனர்.

## டிஸ்கவரி ரொக்கெட்டின் பயணம் மேலும் தாமதமாகும்

அமெரிக்காவால் விண்ணுக்கு ஏவப்படவிருந்த டிஸ்கவரி ரொக்கெட் மீண்டும் பழுதுபட்டதால் அதன் பயணம் மேலும் சில நாட்களுக்குத் தடைப்பட்டுள்ளது.

அமெரிக்காவின் கொலம்பியா ரொக்கெட் கடந்த 2003 ஆம் ஆண்டு நடுவானில் வெடித்து சிதறியது. அதன் பின் முதல் தடவையாக 'டிஸ்கவரி' என்ற ரொக்கெட்டை அடுத்த மாதம் விண்ணுக்கு அனுப்பத்திட்டமிட்டது அமெரிக்கா.

தயார் நிலையில் வைக்கப்பட்டிருந்த டிஸ்கவரிரொக்கெட்டில் இறங்குவதற்குப் பயன்படும் இயந்திரத்தில் விரிசல் ஏற்பட்டு இருப்பது கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.இதனால் ரொக்கெட் ஏவுதள மேடையில் இருந்து மீண்டும் கீழே இறக்கப்பட்டுப் பணிமனைக்கு கொண்டு செல்லப்பட்டது இந்தக் கோளாறு சரி செய்யப்பட்ட பின்பே அது மீண்டும் ஏவுதளத்துக்குக் கொண்டுவரப்படும் இதன் காரணமாக டிஸ்கவரிரொக்கெட் விண்ணில் செலுத்துவது மேலும் சில நாட்கள் தாமதம் ஆகும். என தெரிவிக்கப்படுகிறது.



ரஷ்யாவுக்கு சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள இந்திய சனாதிபதி கலாமுக்கு மொஸ்கோவில் உள்ள அறிவியல் கழகத்தில் புத்தகம் ஒன்று பரிசாக வழங்கப்படுகிறது.

# புதுக்குடியிருப்பு-ஒட்டுசுட்டான் வீதியின் நிலை மிக மோசம்

# புனரமைக்க அரசுநிதி ஒதுக்கவில்லையென்கிறார் பொறியியலாளர்

(புதுக்குடியிருப்பு)

**புதுக்குடியிருப்பு-ஒட்டுசுட்டான் பிரதான வீதியின் நிலை மிக மோசமடைந்துள்ளது. புதுக்குடியிருப்பு, வவுனியாவுக்கான இப்பிரதான வீதியின் நிலையை எவரும் கவனத்தில் எடுப்பதாகத் தெரியவில்லை. கடந்த பல வருடங்களாக இவ்வீதி சீரான முறையில் புனரமைப்புச் செய்யப்படாமல் இருந்து வருகின்றமை மிகவும் வேதனை தரும் விடயமாகவுள்ளது,**

புதுக்குடியிருப்பிலிருந்து ஒட்டுசுட்டானுக்கு செல்வதாயின் நீண்ட நேரம் பயணத்தை மேற் கொள்ளவேண்டிய நிலையுள்ளது. ஒட்டுசுட்டான்,கற்சிலை மடு, முத்து ஐயன்கட்டு உட்பட ஒட்டுசுட்டான் உதவி அரசாங்க அதிபர் பிரிவில் உள்ள பல கிராம மக்கள் மேலதிக சிகிச்சைக்கு புதுக்குடியிருப்பு வைத்தியசாலைக்கே வரவேண்டும் ஆனால் அவசர சிகிச்சைக்கு நோயாளியைக் கொண்டு செல்வதாயின் நீண்ட நேரமெடுக்கும். இதனால் உயிர் ஆபத்துக்கள் கூட ஏற்பட நிறைய வாய்ப்புண்டு .

மேலும் இவ் வீதியின் இரு மருங்கிலுமுள்ள பற்றைகள் வீதியை மூடிவிடும் நிலையில் பல இடங்களில் உள்ளதை அவதானிக்க முடிகிறது. இதனால் பயணிகள் பெரும் அவலங்களை எதிர்கொண்டு வருகின்றனர். பயணங்களை மேற் கொள்ளும் சந்தர்ப்பங்களில் சிறுசிறு காயங்களுக்குள்ளாவதுமுண்டு இப்பற்றைகளை வெட்டியே நீண்ட காலமாகின்றது. இவ்வாறாக இவ் வீதியின் அவலம் தொடர்கதையாக வேயுள்ளது.

இவ் வீதியின் சீர்கேட்டால் பல வாகனங்கள் நெடுங்கேணி முள்ளிய வளை வீதியாலும் கண்டி யாழ் வீதியாலும் (ஏ-9)சுற்றி புதுக்குடியிருப்புக்கு வரும் நிலை ஏற்பட்டுள்ளது.

அப்படியாயின் இவ் வீதியைப் பராமரிப்பதற்குப் பொறுப்பாக இருக்கும் அபிவிருத்தித்திணைக்களத்தின் நிலைப்பாடுகள் என்ன?என்று முல்லை. மாவட்ட வீதி அபிவிருத்தித் திணைக்கள நிறைவேற்றுப் பொறியிலாளர் சிவனடியார் அவர்களிடம் கேட்டபோது.

இவ் வீதி புனரமைப்புச் செய்யாமல் உள்ளமையால் போக்குவரதிற்குகந்ததாக இல்லை, வீதியின் இருபக்கமுள்ள பற்றைகள் வீதியை மூடும் அளவுக்கு பல இடங்களிலுள்ளது. ஆனால் இவற்றை எல்லாம் சீர்செய்வதற்கு நிதி இல்லை தற்போது ஒட்டுசுட்டான் பக்கத்தால் மூன்று கிலோ மீற்றரும் புதுக்குடியிருப்பு நோக்கி மூன்று கிலோமீற்றருக்கும்புனரமைப்புச் செய்வதற்கு நிதி கிடைத்துள்ளது. அவற்றை புனரமைப்பு செய்யப் போவதாக அவர் குறிப்பிட்டார். (08)

# தேசிய எழுச்சிப் பேரவையின் பிரதேச நிர்வாகம் தெரிவு

(உடையார்கட்டு)

உடையார்கட்டு பிரதேச பொது அமைப்பு பிரதிநிதிகளுக்கான கலந்துரையாடலும், உடையார்கட்டு பிரதேச தேசிய எழுச்சிப் பேரவைத் தெரிவும் உடையார்கட்டு மகாவித்தியாலயத்தில் கடந்த 17ஆம் திகதி 4.45 மணிக்கு இடம் பெற்றது.

இந்நிகழ்வில் கருத்துரைகளை தமிழீழ தேசிய எழுச்சிப் பேரவை பொறுப்பாளர் சஞ்சய், முல்லை மாவட்ட தமிழர் புனர் வாழ்வுக் கழகப் பணிப்பாளர் மூர்த்தி, சுதந்திரபுரம் கிராம அலுவலர் சுந்தரலிங்கம், உடையார் கட்டு மகாவித்தியாலய அதிபர் ராஜா ஆகியோர் வழங்கியதையடுத்து உடையார் கட்டுப் பிரதேசத்துக்கான தேசிய எழுச்சிப் பேரவை நிர்வாகத் தெரிவு இடம் பெற்றது.

தெரிவில் 11 பேர் அடங்கிய நிர்வாகக் குழு அமைக்கப் பெற்றது. இதில் செயலாளராக க.விஜயகுமார், துணைச் செயலாளராக பொ.விதன், பொருளாளராக இராஜேந்திரன் ஆகியோரும், நிர்வாக உறுப்பினர்களாக நவசிவாயம், வே.பாமா, திருமதி கனகவல்லி,ஐ.சுமந்திரதேவன், அதிபர் சி.ராஜா, ம. சிறிதரன் , சு. உதயகுமார், கோ.சந்திரபோஸ் ஆகியோர் இடம் பெற்றனர். (19)

# சுதந்திரபுரம் பகுதியில் வீடு தீக்கிரையானது

(உடையார்கட்டு)

உடையார்கட்டு சுதந்திரபுரம் பகுதியில் ஏற்பட்ட தீ விபத்தில் வீடொன்று தீக்கிரையானது இச்சம்பவம் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்றுள்ளது.

வீட்டிலிருந்த பொருட்கள் அனைத்தும் எரிந்து சாம்பராகியுள்ளன. பெரியதம்பி லோகராசா என்பவருடைய வீடே எரிந்து நாசமாகியுள்ளது. இவரது குடும்பத்துக்கு உதவிபுரியும் பணியில் உடையார்கட்டுப் பிரதேச தேசிய எழுச்சிப்பேரவையினரும், சமூகபொருளாதார வளர்ச்சி நிறுவனமும் ஈடுபட்டுள்ளது. (19)

-முல்லைத்தீவில்-

# ஏழு ஐஸ் தொழிற்சாலைகளை அமைக்க யூ.என்.டி.பி நிறுவனம் முடிவு

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவில் சுனாமியால் பாதிக்கப்பட்ட மீனவர்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தும் நோக்குடன் யூ. என். டி.பி. நிறுவனம் ஏழு ஐஸ் தொழிற்சாலைகளை அமைத்துத் தருவதாக மு.மா.க.தொ கூ.சங்க சமாசத்திற்கு தெரிவித்துள்ளது. இதன் முதற் கட்டமாக உடனடியாக ஒரு ஐஸ் தொழிற்சாலை அமைப்பதற்கான நிதியினை வழங்குவதற்காக ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றது.

அத்துடன் நீண்ட காலத்திட்டத்தில் வலை உற்பத்தி ஆலை அமைத்துத் தருமாறு மு.மா.க.தொ.கூ.சங்க சமாசத்தின் தலைவர் யூ. என். டி.பி. நிறுவனத்திடம் கோரிக்கை விடுத்த போது அதற்கான திட்டங்களை தருமாறும் யூ.என். டி.பி. நிறுவனம் கோரியுள்ளது. (20)

# தமிழர் புனர்வாழ்வுக் கழக அனுசரணையுடன் நடாத்தப்படும் பால் நிலை சமத்துவப் பயிற்சி



சமூகத்தில் பால்நிலைச் சமத்துவத்தை ஏற்படுத்தத் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் அனுசரணையுடன் ஒக்ஸ்பாம் நிறுவன நிதியுதவியுடன் உழைக்கும் மகளிர் அபிவிருத்தி நிறுவனம் பால்நிலைச் சமத்துவப் பயிற்சியை வடமராட்சி கிழக்கில் ஆரம்பித்துள்ளது.

ஆண், பெண் இருபாலாரிடமும் சமத்துவத்தையும், புரிந்துணர்வையும் ஏற்படுத்துவதன் மூலம் நல்லிணக்கமுள்ள வன்முறையற்ற சமுதாயத்தை உருவாக்கும் நோக்குடைய இப் பயிற்சியின் ஆரம்பவிழா நேற்று முன்தினம் காலை 10.00 மணிக்கு ஆழியவளையில் கிராமத்தலைவர் ஜெயபாலகிருஸ்ணன் தலைமையில் ஆரம்பமானது. வடமராட்சி கிழக்கைச் சேர்ந்த யூட் தேசியக் கொடி ஏற்றியதைத் தொடர்ந்து மங்கல விளக்கினை வடமராட்சி கிழக்கு அபிவிருத்திப் புனர்வாழ்வுக் கழகப் பணிப்பாளர் சிவஞானம் ஒக்ஸ்பாம் நிறுவனப் பிரதிநிதி செல்வி விக்னா, உழைக்கும் மகளிர் அபிவிருத்திப் புனர்வாழ்வுக் கழகத் தலைவி ஆகியோர் ஏற்றி வைத்தனர். ஆசியுரையை யூட் நிகழ்த்தியதைத் தொடர்ந்து இந் நிகழ்ச்சி தொடர்பான அறிமுக உரையினை ஒக்ஸ்பாம் பிரதிநிதி விக்னா நிகழ்த்தினார். நன்றியுரை திரு.மனோகரனால் நிகழ்த்தப்பட்டது. இந் நிகழ்வுகள் நேற்றைய தினம் வெற்றிலைக்கேணியில் இடம்பெற்றது. இந் நிகழ்வின் தொடர்ச்சிகள் இன்று முள்ளியான் பகுதியிலும், நாளை போக்கறுப்பு பகுதியிலும், நாளை மறுதினம் சுண்டிக்குளம் பகுதியிலும் நடைபெறவுள்ளது.



இதன் மூலம் பால்நிலைச் சமத்துவம் தொடர்பான கருத்துத் தெளிவை கிராம மக்களிடையே ஏற்படுத்த முடியுமென நம்பப்படுகின்றது. (கு)

# கனேடிய பல்கலைக்கழக அனுசரணையுடன் முல்லையில் தொழில் நுட்பக் கல்லூரி திறப்பு

கனேடிய பல்கலைக்கழகத்தின் அனுசரணையுடன் பொருண்மிய மதியுரைகத்தால் முல்லைத்தீவில் சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களின் தொழில்துறையை மேம்படுத்தும் நோக்குடன் முல்லை. தொழில் நுட்பக்கல்லூரி கடந்த சனிக்கிழமை திறந்து வைக்கப்பட்டது.

முல்லை. தொழில் நுட்பக் கல்லூரித் தலைவர் இ.கிருஷ்ண பிள்ளை தலைமையில் ஆரம்பமான நிகழ்வில் பொதுச்சுடரினை முல்லை. மாவட்டதுணை அரசியல் துறைப் பொறுப்பாளர் செல்வம் ஏற்றினார்.

தமிழீழத் தேசியக் கொடியினை முல்லை செயலணிக்குழுப் போராளி றஞ்சன் ஏற்றினார். மங்கல விளக்கினை ரெக் நிறுவன சுகுணன், வூட்ஸ் நிறுவன வதிவிடப் பிரதிநிதி டக்கிராம் ஆகியோர் ஏற்றினார்கள். பெயர்ப்பலகையினை சிரான் பணிப்பாளர் இ.செல்வின்திரை நீக்கம் செய்தார். முதலாவது கட்டடத் தொகுதியினை வூட்ஸ் நிறுவன வதிவிடப் பிரதிநிதி டக்கிராம் திறந்து வைக்க, தையல் பயிற்சிக்கான கட்டடத்தினை முல்லை பங்குத் தந்தை ஜேம்ஸ் பத்திநாதர் அடிகளார் திறந்து வைக்க, மின்பிம வெளி இணைப்பு இயந்திர திருத்தப் பயிற்சி மண்டபத்தினை முல்லை. மாவட்ட க.தொ.கூ.சங்க சமாசத் தலைவர் அ. மரியராசா திறந்து வைத்தார்.

மின் இணைப்பு பயிற்சி மண்டபத்தினை முல்லை தொழில் நுட்பக் கல்லூரி நிர்வாக உறுப்பினர் கமலகாந்தன் திறந்து வைத்தார்.

அலுமினிய தொழில் நுட்பப் பயிற்சிக்கான கட்டடத்தினை நீர்ப்பாசனப் பொறியியலாளர் நி. சிவகுமார் திறந்து வைத்தார். கணினிப் பயிற்சி மண்டபத்தினை முல்லை. மாவட்ட உதவி விவசாயப்பணிப்பாளர் இ.கோகுலதாஸ் திறந்து வைத்தார். அலுவலகக் கட்டடத்தினை பொருண்மியமதியுரையக நிறைவேற்றுப் பணிப்பாளர் சி.சுகுணன் திறந்து வைத்தார்.

கருத்துரைகளை வூட்ஸ் நிறுவன வதிவிடப் பிரதிநிதி டக்கிராம், வூட்ஸ் நிறுவன பிரதி வெளிக்களப் பணிப்பாளர் வே. ஜெயராஜசிங்கம் பொருண்மிய மதியுரைகப் பணிப்பாளர் மா. சுந்தரமூர்த்தி, முல்லை பங்குத் தந்தை ஜேம்ஸ் பத்திநாதர் அடிகளார் ஆகியோர் நிகழ்த்தினார்கள்.

தொடர்ந்து பயிற்சியாளர்களுக்கான துவிச்சக்கர வண்டி வழங்கப்பட்டது. இப் பயிற்சி நெறிக்கு ஒருமாணவருக்கு 45 ஆயிரம் ரூபா செலவாகின்றது எனவும் தெரிவித்தனர்.

இந் நிகழ்வில் பயிற்சியாளர்கள், பெற்றோர்கள் தற்காலிக குடியிருப்புத் தலைவர்கள், வூட்ஸ் நிறுவனப் பணிப்பாளர், பணியாளர்கள் எனப்பலர் கலந்து கொண்டனர். (20

## புதிய நிர்வாகம் தெரிவு

மு.மல்லாவி மத்திய கல்லூரியின் பழைய மாணவர் சங்கப்பொதுக் கூட்டம் இன்று பிற்பகல் 3.00 மணிக்கு மயில்வாகன மண்டபத்தில் நடைபெறும். இக்கூட்டத்தில் புதிய நிர்வாகிகள் தெரிவு இடம் பெறவுள்ளது. சகல கல்லூரிப் பழைய மாணவர்களையும் அன்புடன் அழைக்கின்றோம்.

# கவனிப்பாரற்றுக் கிடக்கும் முத்து ஐயன் கட்டு வீதிகள்

முத்துஜயன் கட்டு கிராமத்திலுள்ள வீதிகள் நீண்ட காலமாக திருத்தப்படாமல் இருப்பதால் அப்பகுதி மக்கள் பெரும் சிரமங்களை எதிர் கொண்டு வருகின்றனர்.

ஒட்டுசுட்டானில் இருந்து முத்துஜயன் கட்டு பகுதிக்குச் செல்லும் பிரதான வீதி முத்துஜயன் கட்டு இடது கரையிலிருந்து வலது கரைக்குச் செல்லும் வீதி, குளக்கட்டில் இருந்து இடது கரைச் சந்தி மன்னாங்கண்டல் வரைச் செல்லும் வீதி என்பனவே நீண்ட காலமாகத் திருத்தப்படாமல் உள்ள வீதிகளாகும். இவற்றை விட இன்னும் பல வீதிகள் பாவிக்க முடியாமல் கைவிடப்பட்ட நிலையில் காணப்படுகின்றது. பேருந்து போக்குவரத்து நடைபெறும் முத்துஜயன் கட்டு கற்சிலைமடு வயல் வீதி அண்மையில் திருத்தம் செய்யப்பட்ட போதும் முழுமையாக வேலைத் திட்டங்கள் நிறை வடையாததனால் மீண்டும் இவ் வீதிகள் குன்றும் குழியுமாகக் காணப்படுகின்றது.

# இடம்பெயர்ந்த மக்களை வேறு இடத்தில் மீளக்குடியமர்த்துவது சாத்தியமாகாது

## -யாழ்.அரச அதிபர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

**உயர் பாதுகாப்புவலயம் காரணமாக இடம் பெயர்ந்த மக்களை வேறு இடத்தில் மீளக்குடியேற்றுவது என்பது சாத்தியமில்லையென யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் தெரிவித்துள்ளார்.**

வலி.வடக்குப் பகுதியில் இருந்து இடம் பெயர்ந்த மக்கள் சார்பில் உயர் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டதைத் தொடர்ந்து இடம் பெயர்ந்த மக்களை மீள வேறு இடத்தில் குடியேற்ற முடியுமா எனக் கேட்டு நீதிமன்றம் அரச அதிபரிடம் அறிக்கை கோரியிருந்தது.

இந்நிலையிலேயே அரச அதிபர் உயர் பாதுகாப்பு வலயம் காரணமாக இடம் பெயர்ந்த மக்களை வேறு இடத்தில் குடியேற்றுவது என்பது சாத்தியமில்லை யெனவும் இடம் பெயர்ந்த மக்கள் தமது சொந்த இடங்களுக்கு அண்மையாக உள்ள இடங்களிலேயே வசித்து வருகின்றமையால் வேறு இடங்களில் குடியேற்றுவதற்கான வசதிகளும் இல்லையெனவும் தெரிவித்துள்ளார். (41)

# மாணவர் எழுச்சி நாள் யூன் இரண்டாம் திகதி

தமிழீழ மாணவர் எழுச்சி நாள் இவ்வாண்டு அடுத்த மாதம் 2ஆம் திகதி கொண்டாடப்படவுள்ளது. ஏனைய காலங்களில் 6ஆம் திகதி கொண்டாடப்பட்ட போதிலும், இவ்வாண்டு உயர்தர் வகுப்பு மாணவர்களின் உயர்தரப் பரீட்சை நடைபெறவிருப்பதனால் இவ்வெழுச்சி நாளை 2ஆம் திகதி கொண்டாடுவதற்கு முடிவு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

மாணவர் எழுச்சி நாளை யொட்டி பல்வேறு விளையாட்டுக்களும், பாடசாலைகளுக்கிடையேயான பொதுஅறிவுப் போட்டிகளும் இடம் பெற்று வருகின்றன. (41)

# யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு த.பு கழகம் வீடுகள் கையளிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்மாவட்டத்தில் யுத்த அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்காக தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தால் அமைக்கப்பட்ட 243 வீடுகள் பயனாளிகளிடம் கையளிக்கப்படவுள்ளன.

"நிகொட்"திட்டத்தின் நிதியுதவியுடன் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தால் நிர்மாணிக்கப்பட்ட இவ் வீடுகள் எதிர்வரும் 29ஆம் திகதி வைபவ ரீதியாக பயனாளிகளிடம் கையளிக்கப்படவுள்ளன.

இதில் சாவகச்சேரியில் 121 வீடுகளும், யாழ்ப்பாணத்தில் கொட்டடி, நாவாந்துறை, சூரியவெளி ஆகிய பகுதிகளில் அமைக்கப்பட் 122 வீடுகளுமாக மொத்தம் 243 வீடுகள் பயனாளிகளிடம் கையளிக்கப்படவுள்ளன.

யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் கே.கணேஸ் இந் நிகழ்வுகளில் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்ளவுள்ளார். (33)

# பொய்ச்சாட்சியம் கூறியதற்காக மாணவிக்கு தடுப்புக்காவல்

(நல்லூர்)

நீதிமன்றத்தில் பொய்ச்சாட்சியம் உரைத்த குற்றத்திற்காக 15 வயதுப் பாடசாலை மாணவி மல்லாகம் மாவட்ட நீதிமன்றத்தினால் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ளார்.

வெள்ளிக்கிழமை மல்லாகம் மாவட்ட நீதிமன்றத்தில் நீதிபதி திருமதி.சறோஜினி இளங்கோவன் முன்னிலையில் புதுவருடப் பிறப்பன்று கணவனால் மனைவியைத் தீயிட்டு கொழுத்திக் கொலை செய்யப்பட்ட வழக்கு விசாரணை இடம்பெற்றது.

அப்போதுமரண விசாரணையின் போது தந்தைதான் தாயை தீ மூட்டி கொலை செய்தார் எனக் கூறிவிட்டு நீதிமன்றில் அதற்குமாறாக பொய்ச் சாட்சியம் அளித்தார்.


இதனை அரச சட்டத்தரணி நீதிபதியின் கவனத்திற்கு கொண்டு வந்ததைத் தொடர்ந்து இன்று வரை தடுப்புக்காவலில் வைக்கும் படி நீதிபதிகட்டளையிட்டுள்ளார். (22)

# குழந்தைகள் விடுதிப் பகுதியில் சுகாதாரச் சீர்கேடுகள்

(அலுவலகசெய்தியாளர்)

யாழ். போதனா வைத்தியசாலை குழந்தைகள் விடுதியை அண்டிய பகுதிகளில் சுகாதாரச் சீர்கேடுகள் அதிகரித்திருப்பதை அவதானிக்கக் கூடியதாகவுள்ளது.

டெங்கு ஒழிப்பு வாரத்தை முன்னிட்டு நகர் முழுவதும் சுகாதார நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ள போதிலும், யாழ்.போதனா வைத்தியசாலையின் குழந்தைகள் விடுதியை அண்டிய பகுதிகளில் குப்பைகள் நிறைந்து காணப்படுவதோடு ஆங்காங்கே கழிவுநீர் தேங்கி நிற்பதனையும் அவதானிக்க முடிகின்றது. இதனால் குறித்த விடுதியில் நுளம்புத் தொல்லை அதிகரித்திருப்பதாகவும் நோயாளர்கள் தெரிவித்துள்ளனர். (சு)



# கலைநிலா அரங்கு

(யாழ்ப்பாணம்)

யாழ். திருமறைக்கலா மன்றத்தின் கலைநிலா அரங்கு நாளை மறுதினம் இரவு 7.00 மணிக்கு திருமறைக்கலாமன்ற மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

இதில் சமகால நிலைமைகள் பற்றிய உரையாடல்களும், இசை நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன.

# திருடர் நடமாட்டம் அதிகரிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். கோப்பாய்ப்பகுதியில் இரவு வேளைகளில் திருட்டுக் கும்பல்களின் நடமாட்டம் அதிகரித்திருப்பதாக அப்பகுதி மக்கள் அச்சம் தெரிவிக்கின்றனர்.

இது குறித்துப் பொலிசாரிடம் முறையிட்டபோதும் அவர்கள் இது குறித்து ஆக்கபூர்வமான எந்த நடவடிக்கைகளையும் எடுக்கவில்லை என மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

# மருந்து வகைகளுக்குத் தட்டுப்பாடு; அதிகாரிகள் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். ஊர்காவற்துறை அரசினர் வைத்தியசாலையில் மருந்து வகைகளுக்குத் தட்டுப்பாடு நிலவி வருவதாக வைத்தியசாலை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

அண்மைக்காலமாக அத்தியாவசிய மருந்து வகைகளைப் பெற்றுக் கொள்ள முடியாத நிலை இவ் வைத்தியசாலையில் காணப்படுகின்றது. இவ்வாறு இங்கு நிலவிவரும் அத்தியாவசிய மருந்துப் பொருட்களுக்கான தட்டுப்பாடு காரணமாக இவ்வைத்தியசாலையின் சேவைகள் பெரிதும் பாதிக்கப்பட்டிருப்பதாக அவர்கள் தெரிவிக்கின்றனர்.

இதன் காரணமாக இவ் வைத்தியசாலைக்கு சிகிச்சைக்காக வரும் நோயாளர்களுக்கு மருந்துகளை வழங்க முடியாத நிலை இருப்பதால் நோயாளிகளைச் சிகிச்சைகளுக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு அனுப்புவதாக ஊர்காவற்துறை அரசினர் வைத்தியசாலை அதிகாரிகள் மேலும் தெரிவிக்கின்றனர். (33)

# மருதனார் மடம் பகுதியில் பார்த்தீனியம் அதிகரிப்பு

யாழ் மருதனார்மடம் பகுதியிலுள்ள விவசாயக் காணிகளில் பார்த்தீனியம் விஷச்செடியின் பெருக்கம் அதிகமாகக் காணப்படுகிறது.

இதனால் இப்பகுதி விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். எனினும் இச்செடியின் பெருக்கத்தைக் கட்டுப்படுத்த எவரும் முன் வரவில்லை என விவசாயிகளால் விசனம் தெரிவிக்கப்பட்டுள்ளது. (33)

# கமக்காரர் வங்கிக்கிளை சாவகச்சேரியில் திறப்பு

யாழ். மாவட்ட கமநல சேவை திணைக்களத்தின் கமக்காரர் வங்கியின் சாவகச்சேரிக்கான கிளை நாளை சாவகச்சேரியில் உள்ள கமநல சேவைகள் திணைக்கள கட்டடத்தில் திறந்து வைக்கப்படவுள்ளது.

கமநலசேவைகள் திணைக்களத்தின் யாழ். மாவட்ட உதவி ஆணையாளர் க.சுந்தரேசன் தலைமையில் காலை 9.30 மணிக்கு நடைபெறவுள்ள இவ்வங்கிக்கிளை திறப்பு விழாவில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ந.ரவிராஜ் கலந்து கொண்டு வங்கியைத் திறந்து வைக்கவுள்ளார். (33)

# ஐ.நா சிறுவர் பாதுகாப்பு நிதியம் சுனாமியால் பாதிக்கப்பட்டோருக்கு உதவி

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் சுனாமியால் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கான மலசலகூடம் மற்றும் குடிநீர்க் கிணறுகள் என்பனவற்றை அமைத்துக் கொடுக்கும் நடவடிக்கையில் ஐக்கிய நாடுகள் சிறுவர் பாதுகாப்பு நிதியம் ஈடுபட்டு வருகிறது.

அந்த வகையில் சுனாமியால் பாதிக்கப்பட்டோர் வாழ்ந்து வரும் பகுதிகளில் ஐக்கிய நாடுகள் சிறுவர் பாதுகாப்பு நிதியத்தால் 37 மலசலகூடங்களும் எட்டு குடிநீர் கிணறுகளும் இது வரையில் அமைத்துக்கொடுக்கப்பட்டுள்ளன.

இவை 20 குடும்பங்களுக்கு ஒரு குடிநீர்க் கிணறு, ஐந்து குடும்பங்களுக்கு ஒரு மலசல கூடம் என்ற அடிப்படையில் அமைக்கப்பட்டுள்ளன.

# மல்லாகம் பகுதியில் குழு மோதல்; வாள்வெட்டில் இளைஞர் காயம்

(தெல்லிப்பழை)

மல்லாகம் பகுதியில் இரு இளைஞர் குழுக்களுக்கு இடையே இடம்பெற்ற மோதல் காரணமாக ஒருவர் வாள் வெட்டுக்கு உள்ளாகியுள்ளார். இச் சம்பவம் தொடர்பாக தெல்லிப்பழைப் பொலிசார் இரு இளைஞர்களைக்கைது செய்துள்ளதுடன் 22 ஈருருளிகளையும் கைப்பற்றிச் சென்றுள்ளார்கள்.

அளவெட்டி கும்பிழாவளைப் பிள்ளையார் ஆலயத்தில் இடம் பெற்ற இசைக்குழு நிகழ்வின் போது இரு குழுக்களுக்கு இடையே மோதல் ஏற்பட்டடுள்ளது. இதில் மல்லாகம் ஏழாலைப் பகுதிகளைச் சேர்ந்த இளைஞர்கள் அடங்குவார் கள் இவர்கள் நள்ளிரவு நேரம் வாள், கத்தி போன்ற ஆயுதங்களுடன் குழுமியதைத் தொடர்ந்து உரிய இடத் திற்கு தெல்லிப்பழை பொலிசார் சென்றனர். அதனையறிந்த இளைஞர் குழுக்கள் ஈருருளிகளைக் கைவிட்டு தப்பியோடியுள்ளார்கள். (41)

# உணவுச்சுகாதார குறைபாட்டால் வயிற்றோட்டம்; பொது மக்களை விழிப்பாக இருக்கக்கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் உணவுச் சுகாதாரம் பேணுதலில் உள்ள குறைபாடு காரணமாக வயிற்றோட்ட நோய் அதிகரித்துவருகிறது. இது குறித்து பொதுமக்களை விழிப்புடன் இருக்குமாறு சுகாதார சேவைகள் திணைக்களம் கோரிக்கை விடுத் துள்ளது.

யாழ்.போதனாவைத்தியசாலைப் புள்ளி விபரங்களை மேற்கோள் காட்டியே சுகாதார சேவைகள் திணைக்களம் இதனைத் தெரிவித்துள்ளது.

அந்த வகையில் கடந்த மூன்று ஆண்டுகாலப்பகுதியில் 6264 பேர் வயிற்றோட்டத்துக்கு இலக்காகி யாழ்.போதனாவைத்தியசாலையில் சிகிச்சை பெற்றிருப்பதாகவும் இதில் 2002 ஆம் ஆண்டில் 2168 பேரும், 2003 ஆம்ஆண்டில் 1846 பேரும், 2004 ஆம் ஆண்டில் 2250 பேரும் வயிற்றோட்டத்துக்காக சிகிச்சை பெற்றிருக்கின்றமையும் சுட்டிக்காட்டப்படுகிறது. (33)

# ஆளும் கூட்டணி அரசைப்பாதுகாக்க பேச்சுவார்த்தைக்கு வாய்ப்பு வழங்குக

## ஐக்கிய மக்கள் முன்னணி கோரிக்கை

**சிறிலங்காவின் ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பைப் பாதுகாக்க பேச்சுவார்த்தை நடத்த சந்தர்ப்பம் வழங்க வேண்டும் என்று சனாதிபதி சந்திரிகாவை மக்கள் ஐக்கிய முன்னணி வலியுறுத்தியுள்ளது.**

இது தொடர்பாக சனாதிபதிக்கு மக்கள் ஐக்கிய முன்னணியின் பிரதான செயலாளர் பியசேன திசாநாயக்க கடிதமொன்றை அனுப்பி யுள்ளார். தேசியபாதுகாப்பு சுயாதீனம் இறைமை ஆகியவை தொடர்பாகவும் பேச்சுவார்த்தை நடத்த எதிர்பார்ப்பதாகவும் அந்த கடிதத்தில் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

மக்கள் ஐக்கிய முன்னணியின் மத்திய செயற்குழுக் கூட்டத்தில் இவ்வாறு தீர்மானம் நிறைவேற்றப் பட்ட இது தொடர்பானஅறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது குறித்து பியசேன திசாநாயக்க கூறுகையில், உத்தேச பொதுக்கூட்டமைப்பு தொடர்பான சனாதிபதியை சந்தித்துப் பேச நேரம் கோரியுள்ளதாக கூறினார்.

பொதுக்கட்டமைப்பு அதன் உள்ளடக்கம் குறித்து தங்களுக்குத் தெரிவிக்கப்படவில்லை என்று தோழமைக்கட்சிகள் வருத்தம் தெரிவித்துள்ள நிலையிலேயே இப்பேச்சுக்களை நடத்த கோரியுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

## தேசப்பற்றுள்ள தேசிய இயக்கத்தின் கிளை ஜப்பானில் விமல் வீரவன்ச தலைமையில் திறப்பு

(கொழும்பு)

தேசப்பற்றுள்ள தேசிய இயக்கத்தின் ஜப்பான் கிளை அலுவலகம் கடந்த ஞாயிற்றுக்கிழமை அங்குரார்ப்பணம் செய்யப்பட்டது.

ஜே.வி.பியின் பிரச்சாரச் செயலாளர் விமல் வீரவன்ச தலைமையில் இவ் அலுவலகம் திறக்கப்பட்டது.

சர்வதேச நாடுகளில் ஆரம்பிக்கப்பட்டுள்ள இக்கிளை அலுவலகம் வெளிநாடுகளில் திறக்கப்பட்ட மூன்றாவது அலுவலகமாகும்.இந்த இயக்கத்தின் முதலாவது, இரண்டாவது அலுவலகங்கள் பிரான்சிலும், இலண்டனிலும் இந்த ஆண்டு திறக்கப்பட்டது.

கனடா, சுவீடன் போன்ற நாடுகளிலும் கிளை அலுவலகங்களைத் திறக்க [illegible] முயற்சி மேற்கொள்ளப்படுகிறது.

# பெருந்தோட்டங்களில் மாற்றுப்பயிர்ச் செய்கை மேற்கொள்வதைத் தடுக்க முடியாது

## தோட்ட உட்கட்டமைப்பு அமைச்சர் தெரிவிப்பு

(கொழும்பு)

பெருந்தோட்டங்களில் மாற்றுப் பயிர்ச்செய்கை மேற்கொள்வதை தடுக்க முடியாது என தோட்ட உட்கட்டமைப்பு அமைச்சர் தெரிவித்துள்ளார்.பெருந்தோட்டங்களில் தேயிலைக்குப் பதிலாக கிழங்கு பயிர்ச் செய்கை மேற்கொள்ளப்படுவது தேயிலை வளத்தை அருகச்செய்வதுடன் சுற்றாடல் மாசையும் ஏற்படுத்துகிறது எனக் குற்றம் சுமத்தப்படுகிறது

இதன் காரணமாக தோட்டத்துறை தொழிலாளர்களுக்கான தொழில் நாட்களில் பாரிய குறைவு ஏற்பட்டு அவர்களின் வருமானத்திலும் தாக்கம் வருமெனச் சுட்டிக் காட்டப்படுகிறது. இந்த நிலையில் இதனைத் தடுக்க ஏதாவது வாய்ப்புகள் குறித்து வினவியபோதே அமைச்சர் இந்தக்கருத்தை வெளியிட்டார்.

ஏற்கனவே அரசாங்கமும் தோட்ட நிறுவனங்களும் செய்துக்கொண்ட ஒப்பந்தத்தின் கீழ் தோட்டக் காணிகளை உப குத்தகைக்கு கொடுக்கலாம் என்ற ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.இந்த நிலையில் கூட்டு ஒப்பந்தத்தின் மூலம் அதனை கட்டுப்படுத்த முடியவில்லை என்றும் அமைச்சர் குறிப்பிட்டார்.

# மன்னார் பி.செயலர் வலதீஸ்வரன் பருத்தித்துறைக்கு இடமாற்றம்

(மன்னார்)

மன்னாரின் பல பிரதேசங்களில் கடந்த 16 வருடங்களாக பிரதேச செயலாளராக கடமையாற்றிய ஆர் வலதீஸ்வரன் யாழ். பருத்தித்துறை பிரதேச செயலாளராக இடமாற்றம் செய்யப்படுவதையிட்டு மன்னார்ப் பிரதேச செயலக நலன்புரிச் சங்கத்தினரால் பிரியாவிடை வைபவம் ஒன்று இடம்பெற்றுள்ளது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை மன்னார் பிரதேச செலயக கேட்போர் கூட மண்டபத்தில் இடம்பெற்ற இந்நிகழ்வில் புதிய பிரதேச செயலாளருக்கும் வரவேற்பு நிகழ்வு இடம்பெற்றது. (18)

# நன்னீர் மீன்பிடித்துறை அபிவிருத்திக்கு ஏற்பாடு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் நன்னீர் மீன்பிடித் துறையை அபிவிருத்தி செய்வதற்கான பல்வேறு நடவடிக்கைகளைப் பிராந்திய நீரக வளங்கள் விரிவாக்க அதிகாரி மேற்கொண்டு வருகின்றார். அபிவிருத்தியின் முதற்கட்டமாகச் சமீபத்தில் மாவட்டத்திலுள்ள நூற்றுக்கும் மேற்பட்ட மீனவர்களை உள்ளடக்கி இரு நாள் பயிற்சிநெறி வழங்கப்பட்டது. நீர்வற்றாத பாரிய குளங்களில் மீனவர்கள் மீன்பிடியில் ஈடுபட்டிருக்கின்றார்கள். இவையே நன்னீர் மீன்உற்பத்தியில் பெரும் பங்கு வகிப்பவையாகும். மட்டக்களப்பு மாவட்டத்தில் 2500 மீனவர்கள் முழு நேர மீனவர்களாக இருக்கின்றார்கள்.இது தவிர 1500 பேர் பகுதி நேர மீனவர்களாக இருக்கின்றார்கள். வற்றாத குளங்களாக மட்டு மாவட்டத்தில் 14 குளங்கள் காணப்படுகின்றன. வற்றுகின்ற குளங்கள் 200இற்கும் மேல் காணப்படுகின்றன. மேலும் இம்மாவட்டத்தில் நன்னீர் மீன் உற்பத்தி 238 மெற்றிக் தொன்னாகும். வற்றுகின்ற குளங்களை பருவகால மீன் வள[illegible]புத் திட்டத்திற்குட்படுத்த முடியும். இவ்வாறு மயிலங்கரச்சை, வ[illegible]ாங்கேணி என்பவைகள் நல்ல அறுவடையைத்தந்ததாகவும் நீரியல் வ[illegible]ள் பிராந்திய அதிகாரி எஸ். தவபாலரெட்ணம் தெரிவித்தார்.

# அடுத்த மாத முற்பகுதியில் ஹெல்கேசன் இல.வருவார்

(கொழும்பு)

நோர்வே பிரதி வெளியுறவுஅமைச்சர் விதார் ஹெல்கேசன் அடுத்த மாத முற்பகுதியில் இலங்கைக்கு வரவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. எனினும் குறித்த திகதி எதுவும் அறிவிக்கப்படவில்லை.

பொதுக்கட்டமைப்பு விடயத்தில் தென்னிலங்கையில் ஏற்பட்டுள்ள முரண்பாடு நிலைமைகளும் சனாதிபதியின் உறுதியான போக்கையும் அடுத்து இடம் பெறும் ஹெல்கேசனின் பயணம் முக்கியம் பெற்றுள்ளது. (32)

# கண்டியில் முச்சக்கரவண்டிகள் பலவற்றுக்கு பொலிஸ் அதிகாரிகளே உரிமையாளர்கள்

(கண்டி)

கண்டியில், பெரும்பாலன முச்சக்கரவண்டிகளின் உரிமையாளர்கள் சிறிலங்கா பொலிஸ் அதிகாரிகளாகவிருப்பதால் சட்டங்களை முறையாக கடைப்பிடிக்க முடியாதிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கண்டி, சிறிலங்கா பொலிஸ் நிலையத்தின் போக்குவரத்துப் பிரிவின் பிரதிப் பொறுப்பதிகாரியொருவர் முச்சக்கரவண்டி சாரதியொருவரால் தாக்கப்பட்டமை தொடர்பாக நேற்றுமுன்தினம் விசாரணையொன்று நடாத்தப்பட்டுள்ளது.

இந்த விசாரணையின் போது, கண்டியிலிருக்கும் 80சதவீதமான முச்சக்கரவண்டிகளுக்கு பொலிஸ் அதிகாரிகளே உரிமையாளர்களெனத் தெரியவந்துள்ளது. கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற விசாரணைகளின் போது வாகனச் சாரதி அனுமதிப் பத்திரம் இல்லாமல் வாகனங்களை ஓட்டிவந்தவர்கள் கைதுசெய்யப்பட்டிருப்பதாகத் தெரிவித்துள்ள கண்டி பொலிஸ் நிலையத்தின் போக்குவரத்துப் பிரிவினர், இவர்களுக்கெதிராகக் கடும் நடவடிக்கையெடுக்கப் போவதாகக் கூறியுள்ளனர்.

இதேவேளை, கண்டி பொலிஸ் நிலையத்தின் போக்குரவத்துப் பிரிவின் பிரதிப் பொறுப்பதிகாரியைத் தாக்கிய முச்சக்கரவண்டி ஓட்டுநர் இனங்காணப்பட்டிருப்பதாகவும், அவருக்கெதிராக சட்டநடவடிக்கையெடுக்கவிருப்பதாகவும் கண்டிப் பொலிசார் தகவல் வெளியிட்டுள்ளனர்.

# ஆயிரம் முஸ்லிம் குடும்பங்களை மீளக்குடியேற்ற நடவடிக்கை

மன்னார் முசலி பிரதேசத்தில் மீண்டும் ஆயிரம் முஸ்லிம் குடும்பங்கள் குடியமர்த்தப்படவுள்ளனர். இதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக தெரி விக்கப்பட்டுள்ளது. இது தொடர்பில் மேலதிக தகவல் தரும் வன்னிப் புனரமைப்பு அமைச்சர் ரிசாத் பதியுதீன் எதிர்வரும் ஆகஸ்ட் மாதம் முசலி பிரதேசத்தில் இடம்பெறவுள்ள தேசிய மீலாத் விழாவை முன்னிட்டு கண்ணிவெடி அகற்றும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இதன்படி கடந்த சில நாட்களுக்குள் நூறுக்கும் மேற்பட்ட கண்ணி வெடிகள் அகற்றப் பட்டுள்ளன. இந்நிலையில் இடம்பெயர்ந்துள்ள சுமார் 1000 முஸ்லிம் குடும்பங்கள் அங்கு மீள்குடியமர்த்தப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

# அலிகம்பையில் மீள்குடியேற்றத்திற்கு பல திட்டங்களுடன் த.பு.கழகம் நடவடிக்கையில்

(அம்பாறை)

அம்பாறை மாவட்டத்திலுள்ள அலிகம்பைக் கிராமத்தில் மக்களை மீளக்குடியேற்றி வீட்டுத் திட்டங்களையும், போக்குவரத்து வசதிகளையும் ஏற்படுத்துவதற்கான வேலைத் திட்டங்களை தமிழர் புனர்வாழ்வுக் கழகம் மேற்கொண்டு வருகிறது.

சுமார் 231 வீடுகளை தலா 75 ஆயிரம் ரூபா பெறுமதியில் அமைத்துக் கொடுப்பதற்கு தமிழர் புனர்வாழ்வுக் கழகம் ஆக்கபூர்வமான வேலைகளை மேற்கொண்டு வருகிறது. இக்கிராமம் கடந்த 1990ம் ஆண்டு ஏற்பட்ட வன்செயலின் போது மிகவும் சேதமாக்கப்பட்டு இங்குள்ள மக்கள் இடம் பெயர்ந்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# அம்பாறையில் ஆறு கோடி ரூபா செலவில் அறுபது குளங்களைப் புனரமைக்க நடவடிக்கை

அம்பாறை மாவட்டத்தில் ஆறு கோடி ரூபா செலவில் அறுபது குளங்கள் புனரமைப்புச்செய்யப்பட்டு ஆறாயிரம் ஏக்கர் நிலத்திற்கு நீர்ப்பாசன வசதிகள் ஏற்படுத்துவதற்கான ஒரு திட்டம் மேற்கொள்ளப்படவிருக்கிறது. அரசாங்கம் 1500 குளங்களைப் புனரமைப்புச் செய்யும் திட்டத்தின் கீழ் அம்பாறை மாவட்டத்தின் கரையோரப் பகுதியிலுள்ள குளங்களும் புனரமைப்புச் செய்யப்படுமா? என இப்பகுதி விவசாய அமைப்புக்கள் கேள்வி எழுப்பியதைத் தொடர்ந்து அம்பாறை மாவட்டத்தில் 60 குளங்கள் ஆறு கோடி ரூபா செலவில் புனரமைப்பு செய்வதற்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இந்த மாவட்டத்தில் 66,963 ஹெக் ரெயர் நிலம் நெற்செய்கைக்கு பயன்படுத்தக்கூடியதாக இருக்கிறது என்றும், அவற்றில் 51300 ஹெக்ரெயர் நிலம் காலபோகத்திலும், 41300 ஹெக்ரெயர் சிறுபோகத்திலும் செய்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. புனரமைப்புச் செய்யப்படும் 60 குளங்கள் மூலம் தற்போது மழை காலத்தில் மட்டும் நெற்செய்கை மேற்கொள்ளப்பட்டு வரும் நிலங்களில் சுமார் ஆறாயிரம் ஏக்கர் நிலத்திற்கு நீர்ப்பாசன வசதிகள் அளிக்கக்கூடியதாக இருக்குமென்று எதிர்பார்க்கப்படுகிறது. தற்போது மாவட்டத்திலுள்ள கமநல சேவை நிலையங்களில் பொறுப்பு அதிகாரிகளிடம் தங்கள் புனரமைப்புச் செய்ய வேண்டிய சிறிய குளங்கள் பற்றியும், நீர்ப்பாசன திணைக்களத்தில் தற்போதுள்ள குளங்கள், அணைக்கட்டுகள், வாய்க்கால்கள் போன்றவைகள் புனரமைப்புச் செய்யும்வேலைத் திட்டங்கள் பற்றியும் கோரப்பட்டுள்ளது.

# இரண்டு நூல்களுக்கான அறிமுக விழா வரும் 29 இல்

(அலுவலக செய்தியாளர்)

எழுகலை இலக்கியப் பேரவைநடாத்தும் இரண்டு நூல்களுக்கான அறிமுகவிழா எதிர்வரும் 29 ஆம் திகதியன்று காலை 10.30 மணிக்கு கிளிநொச்சி மகாவித்தியாலயத்தில் இடம் பெறவுள்ளது.

இணுவையூர் சிதம்பரதிருச்செந்தில்நாதன் தலைமையில் சாந்தன் எழுதிய இருபதாம் நூற்றாண்டு உலக இலக்கியம்', மு.திருநாவுக்கரசு எழுதிய 'சமஷ்டியா தனிநாடா'' ஆகிய இரண்டு நூல்களுக்கான அறிமுக விழா அன்றைய தினம் இடம் பெறவுள்ளன. இந்நிகழ்வில் அனைவரையும் கலந்து சிறப்பிக்கும் வண்ணம் விழா ஏற்பாட்டுக்குழுவினர் வேண்டியுள்ளனர். (சோ)



விடுதலைப்புலிகளின் போர்ப் பயிற்சி ஆசிரியர்களின் சிறப்புப் பயிற்சி நிறைவில் தமிழீழ தேசியத் தலைவர் அவர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தார்.




**16.05.2005/22.05.2005**

**16**

☞ மட்டக்களப்பில் இனந்தெரியாதோரால் முச்சக்கரவண்டிச் சாரதி ஒருவர் சுட்டுக் கொலை.

☞ இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் மாநாடு கண்டி நகரிலுள்ள ஏர்ன்ஸ் ரீஜன்சி என்ற ஐந்து நட்சத்திர விடுதியில் சனாதிபதி சந்திரிகாகுமாரதுங்க தலைமையில் ஆரம்பம்.

☞ இலங்கைக்கு உதவும் நாடுகள் அமைப்பின் கண்டிக் கூட்டத்தை எதிர்த்து நகரில் பிக்குகள் ஆர்ப்பட்டத்தில் ஈடுபட்டனர்.

☞ மட்டக்களப்பு சந்திவெளியில் பொது மக்கள் மீது படையினர் மேற்கொண்ட தாக்குதலைக் கண்டித்து தென்மராட்சிப் பிரதேச மாணவர்கள் அரைமணிநேர எதிர்ப்புப் போராட்டத்தை நடத்தினர்.

☞ திருகோணமலை பேருந்து நிலையமருகில் கைக்குண்டுத் தாக்குதல் மேற்கொண்டதில் புத்தர்சிலை அமைக்கப்பட்டுள்ள இடத்தில் குழுமியிருந்த இளைஞர்களில் ஒருவர் படுகாயம்.

☞ பாலியல் வல்லுறவுக் குற்றத்திற்காக தண்டனை விதிக்கப்பட்ட நிலையில் பௌத்த பிக்கு நீதிமன்றில் தற்கொலை முயற்சி. பின்வைத்தியசாலையில் மரணம்.

☞ விடுதலைப்புலிகளுடன் பொதுக்கட்டமைப்பு ஒன்றை உருவாக்கும் பட்சத்திலேயே உதவிகள் வழங்கப்படுமென உதவி வழங்கும் மாநாட்டில் பல நாடுகள் வலியுறுத்து.

**17**

☞ திருகோணமலை மரத்தடிச்சந்திப் பகுதியில் தமிழ் பொது மகன் ஒருவரின் காது சிங்களக் காடையர் குழுவால் வெட்டப்பட்டது.

☞ திருகோணமலை நகரின் மரத்தடிச் சந்தியில் கடை ஒன்றின் மீது நடத்தப்பட்ட கைக்குண்டுத் தாக்குதலில் ஒருவர் பலி; மூவர் காயம்.

☞ திருகோணமலை பேருந்து நிலையத்தின் அருகில் ஆட்டோ தரிப்பு நிலையம் அமைந்துள்ள காணியில் புத்தர் சிலை ஒன்று நிறுவப்பட்ட செயலைக் கண்டித்து திருகோணமலை நகரில் திருமலை மாவட்ட தமிழ் மக்கள் பேரவையின் பேரில் ஹர்த்தால் இடம் பெற்றது.

**18**

☞ நோர்வேயின் விசேட தூதுவர் எரிக் சூல்ஹெய்ம் நோர்வேயின் வெளிவிவகார அலுவலர் லிசாகோல்டன் ஆகியோர் லண்டனில் புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் அவர்களைச் சந்தித்துப் பேசியபோது சிறிலங்கா சனாதிபதி பொதுக்கட்டமைப்பு வியடத்தில் மனப்பூர்மாக ஈடுபட்டு அது தொடர்பான இறுதிவடிவ ஒப்பந்தத்தில் கையொப்பமிட முன்வரவேண்டுமென விடுதலைப்புலிகளின் அரசியல் ஆலோசகரும், தத்துவாசிரியருமான அன்ரன் பாலசிங்கம் கேட்டுக் கொண்டார்.

☞ மட்டக்களப்பு பொதுச்சந்தையின் பிரதான வாசலில் வைத்து ஈ.பி.டி.பி. உறுப்பினர் ஒருவர் இனந்தெரியாத துப்பாக்கிதாரியினால் சுட்டுக் கொலை.

☞ திருகோணமலை நகரசபை முன்னாள் தலைவர் சூரியமூர்த்தி துப்பாக்கிச் சூட்டிற்கு இலக்காகி காயம்.

☞ வரணி சுட்டிபுரத்தில் இனந்தெரியாத குழு ஒன்றினால் சிறிலங்காப் படைச்சிப்பாய்யொருவர் வெட்டப்பட்டதன் எதிரொலியாக இப்பிரதேசமெங்கும் ஆயிரக் கணக்கான படையினர் மற்றும் பொலிசார் சூழ்ந்து மக்களையும், வீடுகளையும் சோதனை செய்துள்ளனர்.

☞ திருமலை நகரில் அமைக்கப்பட்ட சர்ச்சைக்குரிய புத்தர்சிலையை அகற்றக் கோரி இரண்டாவது நாளாக ஹர்த்தால் மற்றும் கதவடைப்புப் போராட்டத்தில் திருமலை நகரம் பூரணமாக ஸ்தம்பிதம் அடைந்தது.

☞ திருகோணமலை நகரில் பேருந்து நிலையமருகே அமைக்கப்பட்ட புத்தர் சிலையை அகற்றுமாறு திருமலை நீதிமன்ற நீதவானும், மேலதிக மாவட்ட நீதிபதியும் உத்தரவிட்டனர்.

☞ தமிழக ஓவியர் புகழேந்தியின் ஓவியக் கண்காட்சியும் பயிலரங்கும் கிளிநொச்சி அழகியல் கலாமன்றத்தில் நடைபெற்றது.

☞ அம்பாறை வைத்தியசாலையில் உந்துருளி விபத்தில் சிக்கி காயங்களுடன் அனுமதிக்கப்பட்டிருந்த விடுதலைப்புலிப் போராளியையும் அவருக்கு உதவியாகச் சென்றவரையும் சிறிலங்காப் பொலிசார் கைது செய்தனர்.

**19**

☞ தமிழீழ சட்டக்கல்லூரியின் ஐந்தாவது பட்டமளிப்பு விழா கிளிநொச்சியில் இடம்பெற்றது.



☞ மக்கள் கிளர்தெழுந்து ஒரு வெகுஜன எழுச்சியை ஏற்படுத்தினால் எவருமே தடுக்க முடியாது தங்களது உரிமையை இந்த வெகுஜன எழுச்சி மூலம் பெற்று தேசத்தையும் தங்களையும் பாதுகாக்கின்ற அந்த வரலாற்றுக் கடமையை எம் மக்கள் கையிலெடுக்கும் காலம் கனிந்து கொண்டிருக்கிறது. என தமிழீழ சட்டக் கல்லூரி பட்டமளிப்பு விழாவில் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் தெரிவிப்பு.

☞ வாழைச்சேனை ரயில் நிலையத்திற்கு முன்பாக ராசிக்குழு உறுப்பினர் ஒருவர் இனந்தெரியாதோரால் சுட்டுக்கொலை.

☞ விடுதலைப்புலிகளின் போர்ப்பயிற்சி ஆசிரியர்களின் சிறப்புப் பயிற்சி நிறைவில் புதிய போர்ப்பயிற்சி ஆசிரியர்களுக்கான சான்றிதழ்களையும், மூத்த போர்ப்பயிற்சி ஆசிரியர்களுக்கான கௌரவப் பரிசில்களையும் தேசியத் தலைவர் அவர்கள் வழங்கிக் கௌரவித்தார்.

☞ மொனராகலை அம்பாறை வீதியில் ஒன்பதாவது மைல் கல்லிலுள்ள சியம்பலாண்டுவ என்னுமிடத்தில் இடம் பெற்ற கிளைமோர் தாக்குதலில் விசேட அதிரடிப்படை சிப்பாய் ஒருவர் படுகாயமடைந்தார்.

☞ மட்டக்களப்பு வாகரையிலுள்ள ஆண்டாங்குளம் எனுமிடத்தில் குடும்பஸ்தர் ஒருவர் கருணாவின் சகாக்களால் பிடித்துச் செல்லப்பட்டு சுட்டுக் கொல்லப்பட்டார்.

**20**

☞ அம்பாறை மாவட்ட வீரமுனையிலுள்ள விடுதலைப்புலிகளின் பிரதேச அரசியல் துறை அலுவலகம் மீது இனந்தெரியாதோர் நடத்திய தாக்குதலில் மூன்று அரசியல் துறைப் போராளிகள் காயம்.

☞ உடையார்கட்டுப் பகுதியில் இடம் பெற்ற வீதிவிபத்தில் வட்டுக்கோட்டையைச் சேர்ந்த இளைஞர் பலி.

☞ திருகோணமலை ஏகாம்பரம் வீதியில் வசிக்கும் பத்தாம் குறிச்சி பொதுமக்களும், மீனவர்களும் தமக்கு பாதுகாப்பு வழங்கும்படி கண்காணிப்புக் குழு அலுவலகம் முன்பாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.



☞ திருகோணமலை நகரப் பகுதியில் திடீரென நிறுவப்பட்ட சர்ச்சைககுரிய புத்தர் சிலையால் இடம்பெற்ற வன்முறைச் சம்பவங்களில் இரு தமிழர்கள் வாள் வெட்டுக்கு இலக்காகியுள்ளனர்.

☞ வவுனியா நெளுக்குளத்தில் இருந்து இளைஞர் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டது.



☞ இலங்கையில் மூத்த எழுத்தாளரும் இலக்கியவாதியுமான நாட்டுப்பற்றாளர் செம்பியன்செல்வன் கொழும்பில் சாவடைந்தார்.

☞ இராணுவத்தளபதி லெப். ஜெனரல் சாந்தகொட்டேகொட யாழ்குடா நாட்டிற்கு விஜயம் செய்து பாதுகாப்பு நிலைமை தொடர்பாக உயர்மட்ட சந்திப்புக்களை மேற்கொண்டு பாதுகாப்பு ஏற்பாடுகளை அதிகரிக்க உத்தரவிட்டார்.

**21**

☞ மட்டக்களப்பு கல்முனை வீதியிலுள்ள பெரிய கல்லாறில் அமைந்துள்ள விடுதலைப் புலிகளின் அரசியல் துறை அலுவலகம் மீது இனந்தெரியாதோரால் நடத்தப்பட்ட தாக்குதலில் வயோதிபப் பெண்பலி.

☞ புத்தர்சிலை நிறுவிய விவகாரம் தொடர்பாக திருகோணமலை நகரில் ஐந்தாவது நாளாக இயல்பு நிலை பாதிப்பு.

☞ திருகோணமலை நகர்ப் பேருந்து நிலையமருகே நிறுவப்பட்ட புத்தர்சிலை தொடர்பாக திருகோணமலை கடற்படைத் தளத்தில் அரசாங்கத்தினால் உயர் மட்ட மாநாடு நடத்தப்பட்டது. இந்த மாநாட்டை புத்தர்சிலையை நிறுவிய அமைப்பு புறக்கணித்தது.

☞ வடமராட்சி கிழக்கின் குடத்தனைப் பகுதியில் கைவிடப்பட்ட இராணுவ மினி முகாம் அருகில் இருந்து பெண் ஒருவரது எலும்புக்கூடு மீட்கப்பட்டது.

☞ நிதர்சனம் நிறுவன தர்மேந்திரா கலையக உருவாக்கத்தில் இசைப் ;பிரியனின் இசையில் உருவான ஜெயந்தன் படையணியின் "வெல்லும் வரை செல்வோம்" மற்றும் சோதிய படையணியின் "விழி நிமிர்த்திய வீரம்" ஆகிய இசைப்பாடல்கள் அடங்கிய இறு வட்டுகள் அறிமுக விழா கிளிநொச்சி பண்பாட்டு மண்டபத்தில் இடம் பெற்றது.



☞ திருகோணமலை உப்பு வெளிவீதியிலுள்ள கேணியடி எனுமிடத்தில் புத்தர் சிலை அமைப்பு.

**22**

☞ கருணாகுழுவைச் சேர்ந்தவர்களென்ற சந்தேகத்தின் பேரில் நான்கு பேர் ஆயுதங்களுடன் புத்தளம் பொலிசாரால் கைது.

☞ திருகோணமலைக்கு மேலதிக படையினரும், பொலிசாரும் பாதுகாப்புக் கடமைகளுக்காக அனுப்பிவைப்பு.

☞ கண்டி நகரில் மூன்று தமிழ் இளைஞர்கள் குற்றத்தடுப்புப் பிரிவினரால் கைது.

☞ திருகோணமலை உப்பு வெளிவீதியில் கேணியடி என்னுமிடத்தில் நிறுவப்பட்ட மற்றுமொரு புத்தர் சிலை படையினரால் அகற்றப்பட்டது.

-"ஒப்பரேசன் கிளீன் அப்"-

# பாரிய குற்றச்செயல்களுக்கு எதிராக ஆயிரம் பொலிசார் நடவடிக்கை

தென்பகுதியிலுள்ள பயங்கரவாதச் செயல்கள், கொலைகள், கொள்ளைகள் என்பனவற்றை முற்றாகக் கட்டுப்படுத்துவதற்கு "ஒப்பரேசன் கிளீன் அப்" என்ற நடவடிக்கையைத் தாம் ஆரம்பித்துள்ளதாக சிறிலங்கா பொலிஸ்மா அதிபர் சந்திரா பெர்ணாண்டோ தெரிவித்துள்ளார்.

இதற்கென ஆயிரம் பொலிசார் ஈடுபடுத்தப்படுவர் எனவும் அவர் கூறினார். முதலில் இந்த நடவடிக்கை மாத்தறை, அம்பாந்தோட்டை, காலி ஆகிய மாவட்டங்களில் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் பாதாள உலகக் குழுவினர் கள்ளக் கடத்தல்காரர்கள், கசிப்பு வியாபாரிகள் இந்த நடவடிக்கை மூலம் முற்றாக அழித்தொழிக்கப்படுவார்கள் எனவும் அவர் கூறினார். கடந்த 15ஆம் திகதி முதல் இந்த நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது.

சிறிலங்காவின் படையணியிலிருந்து 70 ஆயிரத்துக்கு மேலானோர் தப்பி ஓடித் தலைமறைவாகியுள்ளதுடன் அவர்கள் பெருமளவு ஆயுதங்களையும் எடுத்துச் சென்றுள்ளனர்.

அத்துடன் இவர்கள் பாதாள உலகக் குழுவினருடன் இணைந்து பாரிய சட்டவிரோத நடவடிக்கைகளில் ஈடுபடுவதாகவும் பொலிஸ் திணைக்களம் அறிவித்துள்ளது.

மேலும் பாதாள உலகக் குழுவினருக்கும், அரசியல் வாதிகளுக்கும் இடையில்நெருங்கிய தொடர்பிருப்பதாகக் குற்றம் சாட்டப்பட்டு வருவதும் குறிப்பிடத்தக்கது.

# இந்து சமுத்திரத்தில் ஒக்டோபருக்கு முன் கடற்கோள் அனர்த்த முன்னெச்சரிக்கை மையம்

இந்துசமுத்திரப் பகுதியில் எதிர்வரும் ஒக்டோபர் மாதத்திற்கு முன்னர் கடற்கோள் அனர்த்த முன்னெச்சரிக்கை மையம்அமைப்பதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. கடற்கோள் அனர்த்தம் தொடர்பாக அறிந்து கொள்வதற்கான அனைத்து நவீன உபகரண வசதிகளையும் கொண்டு இந்த மையம் அமைக்கப்படவிருப்பதாகவும் அமெரிக்காவிலுள்ள கடல் ஆய்வு மையத்துடன் தொடர்பு கள் எப்பொழுதும் பேணப்படுமெனவும் யுனெஸ்கோவின் கடல் ஆய்வு தொடர்பான ஆணைக்குழுவின் தலைவர் பற்றிசியோ பேர்னல் தெரிவித்துள்ளார்.

அடுத்து வரும் ஜூலை மாதப் பகுதியில் நவீன உபகரணங்களுடன் கூடிய கடற்கோள் முன்னெச்சரிக்கை மையம் இந்து சமுத்திரப் பகுதியில் காணப்படுமென அவர் குறிப்பிட்டுள்ளார்.

கடற்கோள் போன்ற இயற்கை அனர்த்தங்கள் தொடர்பான முன்னெச்சரிக்கை இந்த மையத்திலிருந்து மக்களுக்கு விரைவாகச் சென்றடைவதற்கான அனைத்து ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்படுமெனத் தெரிவிக்கப்படுகிறது.

ஆசிய பிராந்திய மக்களுக்கு கடற்கோள் அனர்த்தம் தொடர்பான எச்சரிக்கை இந்த மையத்திலிருந்து வழங்கப்படுமெனவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

ஆழிப்பேரலை எச்சரிக்கை மையம் அமைக்கப்படும் வரை தாம் ஆழிப்பேரலை தொடர்பில் இலங்கைக்கு தகவல்களை வழங்கத் தயார் என ஹவாய் ஆழிப்பேரலை மத்தியநிலையம் தெரிவித்துள்ளது. இந்தத் தகவலை ஆழிப்பேரலை தொடர்பான தேசியகுழுவின் தலைவராக ஐக்கிய தேசியக் கட்சி பாராளுமன்ற உறுப்பினர் மஹிந்த சமரசிங்க தெரிவித்தார்.

கடந்த வருடம் டிசம்பர் 26 ஆம் திகதி ஏற்பட்ட ஆழிப்பேரலை தொடர்பில் ஆழிப்பேரலை எச்சரிக்கை ஹவாய் மத்தியஸ்தானம் இலங்கைக்கு முன்கூட்டிய எச்சரிக்கையை காலநிலை அவதான மையத்துக்கு அறிவிக்கவில்லை என்பதை அந்த மத்தியஸ்தானம் ஏற்றுக்கொண்டிருப்பதாகவும் மஹிந்த சமரசிங்க தெரிவித்தார்.

ஆழிப்பேரலை அபாயம் குறித்து ஹவாய் மத்தியஸ்தானம் இலங்கையின் காலநிலை அவதான மையத்துக்கு அறிவித்த போதும் கால நிலை அவதான மையம் அது தொடர்பில் கவனயீனமாக இருந்ததாக குற்றம் சுமத்தப்பட்ட நிலையிலேயே அவர் இந்தத் தகவலை வெளியிட்டுள்ளார். இலங்கையின் காலநிலை அவதான மையத்துடன் தொடர்பு கொள்வதற்கான எவ்வித தொலைபேசி அழைப்புக்களையும் தாம் மேற்கொள்ளவில்லையென ஹவாய் மத்தியஸ்தானம் ஏற்றுக் கொண்டிருப்பதாகவும் மஹிந்த சமரசிங்க குறிப்பிட்டார். (32)

# பொதுக்கட்டமைப்புக் குறித்த பிரச்சினைகளை மக்களிடம் எடுத்துச் சொல்ல சிறி.மு.கா.முடிவு

(கொழும்பு)

பொதுக்கட்டமைப்பு தொடர்பான பிரச்சினைகளை மக்களுக்கு எடுத்துச் சொல்வதற்கான விசேட திட்டங்களை முன்னெடுக்கவிருப்பதாக சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் அறிவித்துள்ளது.

சிறிலங்கா முஸ்லிம் காங்கிரசின் பொதுச் செயலாளர் ஹசன் அலி இந்த அறிவிப்பை விடுத்துள்ளார்.

சிறிலங்கா முஸ்லிம் காங்கிரசும், தேசிய ஐக்கிய முன்னணியும் இணைந்து உருவாக்கியுள்ள முஸ்லிம் சமாதானச் செயலகத்தினூடாக சிறிலங்கா சனாதிபதி சந்திரிகா ஓரிரண்டு தடவைகளே பொதுக்கட்டமைப்புக் குறித்துப் பேச்சுவார்த்தைகள் நடாத்தியிருப்பதாகச் சுட்டிக்காட்டியுள்ள ஹசன்அலி, விடுதலைப்புலிகளுடன் அமைக்கப்படவிருக்கும் பொதுக்கட்டமைப்பில் முஸ்லிம் மக்களுக்கு நன்மை கிடைக்க வேண்டுமென்பதில் தாம் உறுதியாகவிருப்பதாகக் குறிப்பிட்டுள்ளார்.

சிறிலங்கா சனாதிபதியின் இந்த பொதுக்கட்டமைப்பு உருவாக்கப்படுமெனும் தீர்மானத்தால் முஸ்லிம் மக்கள் விரக்தியடைந்திருப்பதாகவும் பொதுக்கட்டமைப்புத் தொடர்பான பிரச்சினைகளை பொதுமக்களுக்கு எடுத்துச் சொல்வதற்கான விசேட திட்டங்களை முன்னெடுக்க விருப்பதாகவும் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரசின் பொதுச் செயலாளர் ஹசன் அலி கூறியுள்ளார்.

அரசாங்கத்தின் பங்காளிக் கட்சியான ஜே.வி.பி பொதுக்கட்டமைப்புக் குறித்து தனது மாற்று யோசனையொன்றை வெளியிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# சேது சமுத்திரக் கால்வாய் மூலம் இல.யின் சுற்றுச்சூழல் பாதிப்படையும்

-சுற்றுச்சூழல் அமைப்பின் நிர்வாகி ஜெகத்குணவர்த்தன தெரிவிப்பு

இந்திய சேதுசமுத்திர கால்வாய் திட்டத்தின் காரணமாக இலங்கைக்கான சுற்றுச் சூழல் பாதிப்பு பாரிய தாக இருக்குமென்று சுற்றுச் சூழல் ஆர்வலர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

சேதுக்கால்வாய் திட்டத்தின் படி கடலை ஆழப்படுத்தும் போதும் அதைத்தொடர்ந்த நடவடிக்கைகளாலும் மீன் இனங்களும் பவளப் பாறைகளும் தொடர்ந்து அழிந்துவிடும் என்று இலங்கை சுற்றுச் சூழல் அமைப்பின் நிர்வாகி ஜெகத் குணர்வத்தன தெரிவித்துள்ளார். சேது சமுத்திரத்திட்டத்தை ஆரம்பிப்பதற்கு முன்பாக சுற்றுச் சூழல் தொடர்பான பாதிப்புகளை ஆய்வு செய்யுமாறு இந்தியாவுக்கு அரசு கோரிக்கை விடுக்க வேண்டும். முக்கியமான பாக்கு நீரிணை மற்றும் மன்னார் வளைகுடா பகுதியில் இந்தக் கால்வாய்க்கான ஆழப்படுத்தும் பணிகள் மேற்கொள்ளப்படவுள்ளன. இந்தக் கால்வாய்ப் பணிகள் இலங்கைக்கு மிக அருகாமையில் மேற்கொள்ளப்பட உள்ளதால் இலங்கைச் சுற்றுச் சூழல் கடுமையான பாதிப்புகளை சந் திக்க நேரிடும் என்றார் அவர்.

# திருமலையில் 2001இற்கு முற்பட்ட பாதுகாப்பு வியூகத்தை மீண்டும் நடைமுறைப்படுத்த சனாதிபதி பணிப்பு

(கொழும்பு)

பாதுகாப்பு அமைச்சின் செயலர் மேஜர் ஜெனரல் அசோக ஜயவர்த்தன உட்பட்ட குழுவினர் நேற்று முன்தினம் சனாதிபதியை சந்தித் தனர். திருகோணமலையில் ஏற் பட்டுள்ள பதற்றநிலை தொடர்பில் விளக்கமளிக்கும் முகமாகவே இந்த சந்திப்பு இடம்பெற்றது. இதன்போது கடந்த ஞாயிறு தாம் சனாதிபதியின் பணிப்புரையின் பேரில் திருகோணமலைக்கு சென்று மேற்கொண்ட நடவடிக்கை கள் தொடர்பாக பாதுகாப்பு அமைச்சின் செயலர் தலைமையி லான குழு சனாதிபதிக்கு விளக் கம் அளித்தது. இந்த நிலையில் 2001 ஆம் ஆண்டுக் காலப் பகுதி யில் திருகோணமலையில் நடைமுறைப் படுத்தப்பட்ட பாதுகாப்பு வியூகத்தை மீண்டும் நடைமுறைப் படுத்துமாறு சனாதிபதி பாதுகாப்பு அமைச்சின் செயலருக்கு பணிப்புரை விடுத்தார் என சனாதிபதி செயலகம் தெரிவித்துள்ளது.

# சனாதிபதியின் உறவினரான ரொனிபீரிசுக்கெதிராக கறுப்புப் பண வியாபாரம் குறித்து விசாரணை

——லண்டன் பி.எஸ்.பெ.ஏ நிறுவனம் நடவடிக்கை

(லண்டன்)

சனாதிபதியின் நெருங்கிய உறவினரான ரொனி பீரிசுக்கு எதிராக நடவடிக்கை எடுப்பது குறித்து இங்கிலாந்தின் பி.எஸ்.எப்.ஏ.(B.S.F.A,) நிறுவனம் தற்பொழுது பரிசீலனை ஆரம்பித்துள்ளது. ரொனி பீரிஸ் லண்டன் இலங்கை வங்கிக் கிளையின் சிரேஷ்ட உத்தியோ கஸ்தர் ஆவார். இவர் லண்டனில் கறுப்புப் பணம் சம்பந்தப்பட்ட வியா பாரம் ஒன்றில் ஈடுபட்டு வந்துள்ளதாக அந்த நிறுவனம் தெரிவித்துள் ளது.

தற்பொழுது அவரின் லண்டன் கிளையின் இலங்கை வங்கியில் வைப்புச் செய்யப்பட்டுள்ள நிதிக்கு புறம்பான சகல விபரங்களையும் இந்த நிறுவனம் திரட்டி வருகின்றது. இவருக்கு வழங்கப்பட்டுள்ள சலுகைகள் சம்பந்தமாக விசேடமாக மறுசீலனை செய்யப்பட்டு வருகின்றது. ரொனி பீரிஸ் இங்கிலாந்து குடியுரிமை பெற்றவர் பிரித்தானிய சட்டங்களுக்கு அமைய வேறு நாடுகளின் வங்கிகளில் வைப்புச் செய்ய முடியாதென அந்நிறுவனம் அறிக்கை வெளியிட்டுள்ளது.

# பிரதம நீதி அரசரின் நடவடிக்கை குறித்து பௌத்த பீடாதிபதிகள் கண்டனக் கடிதம்

(கொழும்பு)

பிரதம நீதி அரசர் சரத் என் சில்வா வெள்ளவாய முன்னாள் நீதிமன்ற நீதியரசர் ஜானக பிரி யக்க பண்டாரவின் விடயத்தைக் கையாண்ட விதம் குறித்து கண்டனம் தெரிவித்து 150 பௌத்த உயர் பீடாதிபதிகள் கையொப்பம் இட்ட மகஜர் ஒன்றினை பிரதம நீதியரசருக்கு சமர்ப்பித்துள்ளனர்.

அம்பாந்தோட்ட பிரதேச குரு கீர்த்திரத்னபால தேரர், வெல்லகிட்டிகல சத்தானந்த தேரர், முல்கிரிகல விகாராதிபதி புத்தசிரி தேரர், வீரகெட்டிய தர்மசிறி தேரர், அம்பகாவெவ தர்மரக்கித்த தேரர், காரன்தெலிய திஸ்பானந்த தேரர் போன்ற முக்கிய குருமார்கள்இதில் கையொப்பம் இட்டுள்ளனர். பிரதம நீதியரசரின் நடவடிக்கைகள் சம்பந்தமாக எமக்கு எதிர்ப்பு தெரிவிக்க உரிமை உண்டு என்றும் அவரின் திருமணம் சொந்த வாழ்க்கைப்பற்றி நாங்கள் விமர்சனம் செய்யமாட்டோம். ஆனால் வெல்லவாய நீதிமன்ற நீதியரசர் வேலை நீக்கம் செய்யப்பட்டமை ஒரு அநீதியான செயல் இதை நாங்கள் வன்மையாக கண்டிக்கிறோம் என அந்த மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குற்றவாளிகளை விடுதலை செய்து நீதிபதிகளை வீடுகளுக்கு அனுப்புகிறார். குற்றவாளிகளை பாதுகாக்கும் பிரதம நீதியரசர் இந்த நாட்டிற்கு தேவைப்படாது. இப்படிப்பட்ட பிரதம நீதியரசர் ஒருவரை தென்னம்மட்டையினால் வெட்டி ஒரு உருவத்தை செய்துகொண்டு பிரதம நீதியரசர் என்று கூற முடியும் எனவும் கட்சி பேதமின்றி நீதியை அமுல்படுத்த வேண்டும். அரசியல்வாதிகளின் கைப்பொம்மையாக பிரதம நீதியரசர் செயற்பட்டு வருகின்றார் என அவர்களின் மனுவில் குறிப்பிட்டுள்ளனர்.

# இல.இல் புதிய வானொலிச் சேவை ஆரம்பிக்க இந்.மித்திரா நிறுவனமும் இ.தொ.கா.வும் முயற்சி

(கொழும்பு)

இலங்கை தொழிலாளர் காங்கிரஸும் இந்தியாவின் மித்திரா நிறுவனமும் இணைந்து புதிய வானொலி சேவை ஒன்றை இலங்கையில் ஆரம்பிக்கவுள்ளன. ஆரம்பிக்கவுள்ள வானொலி சேவைக்கான பணிகள் தொடங்கியுள்ளன. இந்த நிலையில் இதற்கான அலைவரிசையை ஒதுக்கும் பணி தற்சமயம் நடைபெறுவதாக கொழும்புச்செய்திகள் தெரிவிக்கின்றன.


## கரைச்சி தெற்கு ப.நோ.கூ.சங்கம், கிளிநொச்சி

## வாகனங்கள் பகிரங்க ஏல விற்பனை

நல்ல நிலையிலுள்ள எமக்குச் சொந்தமான புத்தகப் பதிவுகளும் உடைய பின்வரும் விபரப்படியான வாகனங்கள் பகிரங்க ஏல விற்பனை மூலம் 09.06.2005 ஆம் திகதி 10.00 மணிக்கு கரைச்சி தெற்கு ப.நோ.கூ.சங்க தலைமைப் பணிமனை வாகனத்தரிப்பிடத்தில் வைத்து விற்பனை செய்யப்படவுள்ளது. கொள்வனவு செய்ய விரும்புவோர் மீளளிப்பு வைப்பாக 1000/=(ஆயிரம்) மட்டும் செலுத்தி பதிவு செய்து கேள்வியில் பங்கு கொள்ளலாம். வாகனங்களை இன்றிலிருந்து 08.06.2005 ஆம் திகதி வரை கடமை நேரங்களில் பார்வையிடலாம். தெரிவு செய்யப்படுபவர்கள் மூன்று நாட்களுக்குள் முழுப் பணத்தினையும் செலுத்தி வாகனங்களைப் பெற்றுக் கொள்ளல் வேண்டும்.

வாகன விபரம்

| | |
|---|---|
| 01. பாரவூர்தி இசுஸ் | .. 265962 |
| 02. பாரவூர்தி இசுஸ் | .. 249645 |
| 03 ஈ. எல். எவ். வான் | .. 285528 |
| 04 இருசக்கர உழவு இயந்திரம் | |
| 05 உந்துருளி எம்டி-90 | .. 151-5491 |

பொதுமுகாமையாளர்,
கரைச்சி தெற்கு ப.நோ.கூ.சங்கம்,
யாழ்சாலை,கிளிநொச்சி.

(சி.11972)

யாழ்ப்பாணம்



# இந்தியாவின் அணு ஆயுதம் அழிவிற்குப் பயன்படாது



## ரஷ்யாவில் அப்துல்கலாம்

**இந்திய அணுஆயுதம் அழிவுக்கு பயன் படுத்தப்படாது என்று ரஷ்ய பாராளுமன்றத் தில் இந்திய சனாதிபதி அப்துல் கலாம் உறுதியளித்துள்ளார்.**

சனாதிபதி கலாம் நான்கு நாள் சுற்றுப்பயணமாக ரஷ்யா சென்றுள்ளார். நேற்று முன்தினம் அவர் மொஸ் கோவில் ரஷ்ய பாராளுமன்றமான துமாவில் உரையாற் றினர். அப்போது அவர் கூறியதாவது;

இந்தியாவை சுற்றியுள்ள நாடுகள் அணு ஆயுதங்களை வைத்திருப்பதால் நாங்களும் அணு ஆயுத நாடாக மாறுவதைத் தவிர வேறு வழியில்லை. அணு ஆயுதப்பரவல் தடைச் சட்டத்தில் நாங்கள் கையெழுத்துப் போடவில்லை என்றாலும் இந்தியா பொறுப்புள்ள நாடு அண்மையில் இந்திய பாராளுமன்றத்தில் பேரழிவு ஆயுதங்களை தவறாக பயன்படுத்துவதை தடுக்கும் சட்ட மசோதா நிறை வேற்றப்பட்டுள்ளது. பேரழிவு ஆயுத ரகசியங்களை இந்தியா காக்கும் மற்ற நாடுகளுக்கு அணு குண்டு தொழிநுட்பத்தை இந்தியா வழங்காது.

இந்தியாவின் அண்டை நாடுகளான பாகிஸ்தான் - சீனாத் தலைவர்கள் அண்மையில் டில்லி வந்திருந்தனர். தீக்கப்படாதுள்ள பிரச்சினைகளைத் தீக்க அவர்கள் பேச்சு வார்த்தை நடத்தினர் என்றார்கலாம்.

மொஸ்கோவில் சனாதிபதி கலாமுக்கு ரஷ்யாவுக்கான இந்தியத் தூதுவர் விருது அளித்தார். இதில் ஏராளமான ரஷ்ய வாழ் இந்தியர்கள் கலந்து கொண்டனர். அவர்கள் கேட்ட கேள்விகளுக்கு சனாதிபதி பதிலளித்தார்.


# கப்பல், சாலை போக்குவரத்திற்கு மாபெரும் திட்டம் உருவாகிறது

**டி.ஆர் பாலு**

இந்தியாவின் அனைத்து நெடுஞ்சாலைகளையும், மேம்படுத்துவதற்காக ரூ. 17200 கோடி முதலீட்டில் மாபெரும் திட்டமொன்று உருவாக்கப்பட்டு வருவதாக மத்திய கப்பல் சாலை போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் டி.ஆர் பாலு தெரிவித்தார். ஜெய்ப்பூரில் நேற்று முன்தினம் பிரதமர் மன்மோகன்சிங் ஜெயப்பூர் கிஷன்கர் ஆறு வழிப் பாதையை நாட்டுக்கு அர்ப்பணிக்கும் நிகழ்ச்சிக்கு தலைமை ஏற்று பேசுகையில் பாலு இதனைத் தெரிவித்தார். மேலும் அவர் தெரிவித்துள்ளதாவது:-

ஐக்கிய முற்போக்கு கூட்டணி அரசு பொறுப்பேற்று ஓராண்டு முடிவடைந்துள்ள நிலையில் பல்வேறு நெடுஞ்சாலை மேம்பாட்டுத் திட்டங்கள் துரிதப்படுத்தப்பட்டுள்ளன. முந்தைய தேசிய ஜனநாயகக் கூட்டணி அரசு நாள் ஒன்றுக்கு 1.86 கி.மீ நீள நெடுஞ்சாலைகளை அமைத்தது.

ஆனால் தற்போதைய அரசு நாள் ஒன்றுக்கு சராசரியாக 6.49 கி.மீ நீள நெடுஞ்சாலைகளை அமைத்து வருகிறது. சாலை கட்டமைப்பு உள்ளிட்ட நாட்டின் கட்டமைப்பு துறை மேம்பாட்டிற்கான குழுவிற்கு பிரதமரே தலைமை ஏற்றுள்ளார். கட்டமைப்பு வளர்ச்சிக்கு இந்தஅரசு அளித்து வரும் முக்கியத்து வம் இதன் மூலம் புலப்படும். இந்தக் குழு நாட்டின் ஒட்டு மொத்த சாலைக் கட்டமைப்பை மேம்படுத்த ஒருங்கிணைந்த திட்டமொன்றை உருவாக்குமாறு மத்தியசாலைப் போக்குவரத்து அமைச்சகத்திற்கு உத்தரவிட்டுள்ளது. இந்தத் திட்டத்தில் ரூ.172000 கோடி முதலீடு செய்யப்படும் எனத் தெரிவித்தார்.



இந்திய மத்திய அரசின் ஓராண்டு சாதனைகள் அடங்கிய புத்தகத்தை மன்மோகன் சிங் வெளியிட்டுவைக்க, காங்கிரஸ் கட்சித் தலைவி சோனியாகாந்தி பெற்றுக்கொண்டார்.

# அடுத்த நான்கு ஆண்டுகளில் இந்தியா உலகிலேயே சிறந்த இடத்தைப்பிடிக்கும்

**பிரதமர் மன்மோகன்சிங்**

அடுத்த நான்கு ஆண்டுகளில் உலகிலேயே சிறந்த இடத்தை இந் தியா பிடிப்பது உறுதி. அடிப்படை கட்டமைப்பு வசதியும், இந்தியாவில் அதிகரிக்கும் என்று பிரதமர் மன் மோகன்சிங் தெரிவித்துள்ளார்.

தங்க நாற்கரசாலை திட்டத்தின் ஒரு பகுதியாக ராஜஸ்தான் மாநிலத் தில் ஜெய்ப்பூர் - கிஷன் கார் இடையே 90 கி.மீ. நீள ஆறு வழி சாலையை பிரதமர் மன்மோகன்சிங் திறந்து வைத்தபோது பேசியதாவது;

வறுமையை அடியோடு ஒழிப்பது தான் இந்த அரசாங்கத்தின் முதல் நோக்கமாகும். இந்த நோக்கத்தை எட்ட வேண்டுமானால், விவசாய உற் பத்தியும், தொழில் உற்பத்தியும் அதி கரிக்க வேண்டும். இவற்றை அதி கரிக்கு புதிய வழிவகைகளை கண்டறிய வேண்டும். வறுமையை யும் வேலை இல்லாத் திண்டாட்டத் தையும் ஒழிக்க வேண்டுமானால், பொருளாதார சீர்திருத்தங்கள் விரைவு படுத்தப்பட வேண்டும். பலப்படுத்தப் பட வேண்டும். சாலை, ஆரோக்கிய வாழ்வு, கல்வி, மின்சாரம் ஆகிய அடிப்படைக் கட்டமைப்பு வசதிகள் அனைத்து கிராமங்களுக்கும், நகரங்களுக்கும் கிடைக்க வேண்டும்.

அடுத்த நான்கு அல்லது ஐந்து ஆண்டுகளில் உலகிலேயே மிகச் சிறந்த இடத்தை இந்தியா பிடிப்பது உறுதி. அடிப்படைக் கட்டமைப்பு வசதிகளிலும் இந்தியா முன்னேற்றம் காணும். நான் 1991ஆம் ஆண்டு நிதி மந்திரியாக இருந்தபோது பொருளாதார சீர்திருத்தம் தொடங்கியது. இந்த சீர்திருத்தத்தை மேலும் முன்னெடுத்துச் செல்வதில் அனைத்துக் கட்சிகளிடமும் ஒருமித்த கருத்து ஏற்பட்டு இருப்பது மகிழ்ச்சி அளிக்கிறது.

பொருளாதார சீர்திருத்தங்கள் பலப்படுத்தப்பட வேண்டும். வேலை இல்லாமையும், வறுமையும் ஒழிக் கப்பட வேண்டும் என்பதை அனைத் துக் கட்சிகளும் உணர்ந்து உள்ளன. இந்த அரசு எடுத்துவரும் நடவடிக் கைகளால் அடுத்த ஐந்து ஆண்டு களில் வறுமை அடியோடு ஒழிக்கப் படும் என்று மன்மோகன்சிங் கூறினார்.

# ஐக்கிய முற்போக்குக் கூட்டணிஅரசின் ஒருவருட தவறுகளை வெளியிட்டார் அத்வானி

ஐக்கிய முற்போக்கு அரசின் தவறு பட்டியலை அத்வானி வெளியிட்டார்.

அதில் ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசின் ஒரு ஆண்டு ஆட்சி யில் உள்நாட்டுப் பாதுகாப்பு கேள்விக் குறியாகிவிட்டது. தேர்தல் ஆணைய கம் போன்ற அரசியல் அமைப்பின் உயர்ந்த அமைப்புக்களை இழிவுபடுத்தி விட்டது என தேசிய சனநாயகக் கூட்டணி கடுமையாக விமர்ச்சித்துள் ளது. இது தொடர்பாக அறிக்கைப் புத் தகம் ஒன்றை நேற்று தே.ஜ.கூட்டணி வெளியிட்டுள்ளது. இதில் பரம்பரை ஆட்சி, பிரதமர் பதவி பெருமையைக் குறைத்தல், மோசமான உள்நாட்டுப் பாதுகாப்பு, நிறைவேற்றப்படாத வாக் குறுதிகள் மற்றும் வெளிநாட்டு கொள்கையில் செய்த தவறுகள் என்ற ஐந்து தலைப்புக்களில் ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசின் தவறுகள் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. பின்னர் இது குறித்து பா.ஜ. தலைவர் எல்.கே. அத்வானி செய்தியாளர் களிடம் கூறியதாவது,

பெரும்பாலான பொருளாதாரக் கொள்கையில் ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசின் முக்கிய கட்சிக்கும் (காங்கிரஸ்), அதனை ஆதரிக்கும் முக்கிய கட்சிக்கும் (இடதுசாரிகள்) மோதல் ஏற்பட்டுள்ளது. இது தொடர்பாக அவைகள் சண்டை போட்டுக்கொண்டிருக்கின்றன. ஒரு மனிதர் என்ற முறையில் பிரதமரை நான் பாராட்டுவேன். அவர் நல்ல மனிதர். ஆனால், அவர் ஒரு பலவீனமான பிரதமர். தேர்தல் ஆணையகத்தை லல்லு பிரசாத் கடுமையாக விமர்ச்சித்துள்ளார். வாஜ்பாய் அமைச்சரவையில் உள்ள மந்திரி ஒருவர் இவ்வாறு பேசியிருந்தால் அடுத்த நாளே அவர் பதவியைவிட்டு நீக்கப்பட்டிருப்பார் என்றார்.

# தமிழுக்கு முதலிடம் கிடைக்கும் வரை போராட்டம் தொடரும் – ராமதாஸ்

அனைத்துத் துறைகளிலும் தமிழுக்கு முதலிடம் கிடைக்கும் வரைப் போராட்டம் நீடிக்கும் என்று ராமதாஸ் அறிவித்துள்ளார்.

விளம்பரப் பலகைகளில் பிற மொழி எழுத்துக்களை அழிக்கும் தமிழ் பாதுகாப்பு இயக்கப் போராட்டம் குறித்து பா.ம.க. நிறுவனர் டாக்டர் ராமதாஸ் குறிப்பிட்டிருப்பதாவது,

தமிழ் பாதுகாப்பு இயக்கம் என்பது எதற்கும் எதிரானது அல்ல. அது நடத்துகிற போராட்டம் யாருக்கும் எதிரானது அல்ல. குறிப்பாக, எந்த மொழிக்கும் எதிரானது அல்ல. இன்னும் சொல்லப்போனால், ஆங் கிலத்திற்கு எதிரானதும்அல்ல. அரசுக் கும் எதிரானதும் அல்ல. இது தமிழ் மொழிக்கு ஆதரவான போராட்டம். தமிழ்நாட்டில் தமிழுக்கு முதன்மை இடம்கொடுக்கப்பட வேண்டும் என்று வலியுறுத்துகிற போராட்டம். தமிழ் நாட்டில் தமிழுக்கு முதன்மை இடம் கொடுக்காவிட்டால் வேறு எங்கே தமிழுக்கு முதன்மை இடம் கிடைக் கும்? தமிழகத்தில் தமிழ் ஆட்சி மொழி என்ற நிலையை உருவாக்கா விட்டால் பிறகு எப்படி அகில இந்திய அளவில் தமிழை ஆட்சி மொழி யாக்க முடியும்? இதை வலியுறுத்து வதற்காகத்தான் தமிழ் பாதுகாப்பு இயக்கம் பலகட்டப் போராட்டங்களை அறிவித்திருக்கிறது என்றார்.



பீகார் சட்டசபை கலைக்கப்பட்டதற்கு எதிர்ப்புத் தெரிவித்து பாட்னா வில் தேசிய சனநாயக கூட்டணியினர் ஆர்ப்பாட்டம் நடத்தினர். அப் போது ஆர்ப்பாட்டக்காரர்களுக்கும், பொலிசாருக்கும் மோதல் நடந்தது.

# போதைப் பொருள் கடத்திய இலங்கையர் கைது

மும்பையில் இருந்து ரூ. மூன்று கோடி இந்திய ரூபாய் மதிப்புள்ள போதைப்பொருள் (ஹெரோயின்) கடத்தி வந்த இலங்கை வாலிபர் சென்னை விமான நிலையத்தில் கைது செய்யப்பட்டார்.

சென்னை மீனம்பாக்கம் காமராஜர் உள்நாட்டு விமான நிலையத்துக்கு மும்பையில் இருந்து வரும் விமானத்தில் 35 வயது மதிக்கத்தக்க வாலிபர் சூட்கேசில் மூன்று கோடி இந்திய ரூபாய் மதிப்புள்ள ஹெரோயின் கடத்தி வருவதாக சென்னை போதைப் பொருள் தடுப்புப் பிரிவுக்கு ரகசிய தகவல் கிடைத்தது. இதையொட்டி போதைப் பொருள்தடுப்புப்பிரிவு அதிகாரிகள் மாறு வேடத்தில் விமான நிலையத்தை கண்காணித்தனர். மும்பையிலிருந்து விமானம் சென்னை வந்ததும், அதில் இறங்கிய பயணியை போதைப் பொருள் தடுப்புப் பிரிவு அதிகாரிகள் நிறுத்தி சோதனையிட்டனர்.

ஒரு சூட்கேசை சோதனையிட்டதில் மூன்று கிலோ ஹெரோயின் இருப்பதைக் கண்டுபிடித்தனர். விசாரணையில் இலங்கையை சேர்ந்த அப்துல் கரீம் என்பவரே கடத்தி வந்தது தெரிய வந்துள்ளது.



ஸ்ரீநகர் தால் ஏரியில் சுற்றுலாப்பயணிகளின் வருகை அதிகரிக்கத் தொடங்கி யுள்ளது. இங்கு ஒரு பெண்மணி ஏரியில் உல்லாசப்பயணம் செய்கிறார்.

# மேற்கிந்தியத் தீவு அணியில் லாரா முதல் டெஸ்ட் நாளை ஆரம்பம்



பாகிஸ்தானுக்கு எதிரான முதல் டெஸ்ட் கிரிக் கெட் போட்டியில் பங்கேற்கும் மேற்கிந்தியத்தீவுகள் அணியில் பிரையன் லாரா மீண்டும் இடம் பெற்றுள்ளார்.

பார்படோஸில் நாளை நடைபெறவிருக்கும் இப்போட்டி யில் பங்கேற்கும் 13 பேர் கொண்ட மேற்கிந்தியத் தீவுகள் அணி அறிவிக்கப்பட்டுள்ளது.


இதுவரை 115 டெஸ்ட் போட்டிகளில் பங்கேற் றுள்ளவர் முப்பத்தாறு வயது லாரா. பாகிஸ்தானுக்கு எதிராக ஞாயிற்றுக்கிழமை முடிந்த மூன்று ஆட்டங்கள் கொண்ட ஒருநாள் தொடரில் அவருக்கு ஓய்வு வழங்கப்பட் டிருந்தது.

இத்தொடரை பாகிஸ்தான் 3-0 என்ற கணக்கில் கைப்பற்றியது. 47 ஆண்டுகளுக்குப்பின் பாகிஸ்தான் இத்தகைய வெற்றியைப் பெற்றுள்ளது.

இதையடுத்து மேற்கிந்தியத் தீவுகள் அணியில் மாற்றங்கள் அவசியம் என்று அந்நாட்டு அணி உணர்ந்துள்ளது.அணியில் லாரா இருந்தால் மற்ற வீரர்களுக்கும் உற்சாகமாக இருக்கும் என்று அணித் தேர்வாளர்கள் கருதுகின்றனர்.

இந்நோக்கில் லாரா ஆரம்ப துடுப்பாட்ட வீரர் ஸ்மித், வேகப்பந்து வீச்சாளர்கள் ரியான் கிங், பிடெல் எட்வார்ட்ஸ் ஆகியோர் அணியில் மீண்டும் சேர்க் கப்பட்டுள்ளனர். இத்துடன் டெஸ்ட் அணியில் இயன் பிராட்ஷா முதன்முதலாக சேர்க்கப்பட்டிருப்பதும் குறிப் பிடத்தக்கது.

# பிரெஞ் ஓபன் டென்னிஸ் மிஸ்கினா அதிர்ச்சித் தோல்வி



நேற்று முன்தினம் புகழ்பெற்ற ஓபன் டென்னிஸ் போட்டிகள் பரிஸ் நகரில் தொடங் கின. பல்வேறு முதல் சுற்று ஆட்டங்கள் நடைபெற்றன. அதில் ஒரு ஆட்டத்தில் ரஷ்ய வீராங்கனை அனஸ்தாசியா மிஸ்கினாவும், ஸ்பெயின் வீராங்கனை மரிய சான்செஸ் லோரன்ஸ்சாவும் மோதினார்கள். உலகத்தர வரிசையில் ஐந்தாவது இடத்தை வகிக்கும் அனஸ்தாசியா எதிர்பாராதவிதமாக அதிர்ச்சித் தோல்வியைத் தழுவினார். மரிய சான்செஸ் 6-4, 4-6, 6-0 என்ற செட் கணக்கில் ஒரு மணி நேரம் 40 நிமிடத்தில் அனஸ்தாசி யாவை தோற்கடித்தார். அனஸ்தாசியாவுக்கு 23 வயது ஆகிறது.அவரை வென்ற மரியசான்செசுக்கு 27 வயது ஆகிறது. இவர் உலகத்தர வரிசையில் 109 ஆவது இடம் வகிக்கும் வீராங்கனை ஆவார்.இதேவேளை சுவீஸ் வீரர் ரோஜர் பெரடர் தனது முதல் சுற்று ஆட்டத்தில் இஸ்ரேல் வீரர் துதிசிலா என்பவரை எதிர்த்து மோதினார். துதிசிலா உலகத்தர வரிசையில் 264 ஆவது இடத்தில் இருப்பவர் எனவே அவரை ரோஜர் பெரடர் எளிதாக ஊதித்தள்ளி விட்டார். பெரடர் 6-1,6-4,6-0 என்ற செட் கணக்கில் வெற்றி பெற்று இரண்டாவது சுற்றுக்குத்தகுதிபெற்றார்.




கலிபோர்னியாவின் கார்ஸன் நகரில் நடந்த சர்வதேச தடகளப் போட்டியில் ஆண்களுக்கான 100 மீ. ஓட்டப்பிரிவில் அமெரிக்காவின் லியோனார்டு ஸ்காட் (வலது) முதலிடம் பெற்றார். அருகில் இரண்டாம் இடம்பெற்ற சக வீரரான மவுரீஸ் கிரீன்.







பாடசாலைகளுக்கிடையிலான மாகாண மட்ட போட்டிக்குத் தெரிவான கிளிநொச்சி மகாவித்தியாலய 17 வயதிற்குட்பட்ட வலைப்பந்தாட்ட அணியினருடன், பயிற்சி ஆசிரியைகளையும் படத்தில் காணலாம்.


படம்:– குகன்

# சிறிலங்கா-அவுஸ்-தென்னாபிரிக்கா பங்கேற்கும் முக்கோண ஒருநாள் போட்டி 2006 இல் அவுஸில்



அடுத்த வருட முற்பகுதியில் அவுஸ்திரேலியாவில் நடைபெறவுள்ள வி.பி (V.B) கிண்ண முக்கோண ஒரு நாள் கிரிக்கெட் தொடரில் மூன்றாவது நாடாக பங்கேற்க சிறிலங்காவுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

வருடந்தோறும் நடைபெறும் இத்தொடரின் அடுத்த போட்டி 2006 ஆம் ஆண்டு சனவரி 13 ஆம் நாள் மெல்பேர்னில் ஆரம்பமாகிறது. எனினும் மெல்பேர்ன் கிரிக்கெட் மைதானம் 2006 ஆம் ஆண்டுபொது நலவாய நாடுகளின் மெய்வல்லுநர் போட்டிகளுக்காக நவீன மயப்படுத்தப்படுவதால் மெல்பேர்னின் டொக்லண்ட் மைதானத் திலே இம்முக்கோணத் தொடர் ஆரம்பமாகும் என அறிவிக் கப்படுகிறது.





இத் தொடரில் எட்டு சர்வதேச ஒரு நாள் போட்டியில் பங்கேற்கும் சிறிலங்கா அணி இறுதிப் போட்டிக் குத் தகுதிபெறுமாயின் மேலும் இரண்டு அல்லது மூன்று போட்டி களில் பங்கேற்க நேரிடும் உலகத்தர வரிசையில் முறையே இரண்டாவது, மூன்றாவது இடங்களைப் பிடித் துள்ள சிறிலங்கா, தென்னாபிரிக்க அணிகள் இதில் பங்கேற்பதால் போட்டித் தொடர் மிக விறுவிறுப்பாக அமையுமென ரசிகர்கள் எதிர் பார்க்கின்றனர். மூன்று இறுதிப்போட்டிகளைக்கொண்ட இத் தொடரின் இறுதியாட்டம் 2006 பெப்ரவரி 14 ஆம் திகதி நடைபெறும்.

# பட்டம் பெறும் வாய்ப்பை தவறவிட்டார் ஆனந்த்



சோபியாவில் நடைபெற்றுவந்த எம்டெல் மாஸ்டர்ஸ் செஸ் சம்பியன் போட்டியில் பட்டம் வெல்லும் வாய்ப்பை தவறவிட்டார் இந்தியாவின் விஸ்வநாதன் ஆனந்த்.

ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற பத்தாவது சுற்று ஆட்டத்தில் ஜூடித் போல்கருடன் சமன் கண்டு இரண்டாவது இடத்தைப் பிடித்தார் ஆனந்த். இப்போட்டியில் ஆனந்த் மொத்தம் 5.5 புள்ளிகள் சேர்த்தார்.

மற்றொரு ஆட்டத்தில் உள்ளூர் வீரர் வாசெலின் தபலோவ் ரஷ்யாவின் விளாடிமீர் கிராம்னிக்கை வீழ்த்தி மொத்தம் 6.5 புள்ளிகளுடன் பட்டம் வென்றார். ரஸ்லன் போனமரியோவ் ஜூடித் போல்கர் ஆகியோர் தலா ஐந்து புள்ளிகளுடன் மூன்றாம் இடத்திலும், கிராம்னிக் ஆடம்ஸ் தலா நான்கு புள்ளிகளுடன் கடைசி இடத் திலுமுள்ளனர். இது எனக்கு மோசமான தோல்வி அல்ல. அதேபோல் பட்டம் வென்ற தபலோவ் சிறப்பாக ஆடினார். ஆகவே அதற்கான தகுதி அவருக்கு உண்டு என்றார் ஆனந்த்

# முல்லை மாவட்ட பாடசாலைகளுக்கிடையிலான சதுரங்கப் போட்டி முடிவுகள்

முல்லை மாவட்ட பாடசாலைகளுக்கிடையிலான சதுரங்கப்போட்டி கடந்த 21ஆம் தி தி புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரியில் இடம் பெற்றது.15 வயது ஆண்கள் பிரிவில் முதலாம் இடத்தை செம்மலை மகாவித்தியாலயமும், இரண்டாம் இடத்தை, புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரியும், மூன்றாம் இடத்தை புதுக்குடியிருப்பு சிறிசுப்பிரமணிய வித்தியாசாலையும் பெற்றுக்கொண்டன.

15வயது பெண்கள் பிரிவில் முதலாம் இடத்தை புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரியும், இரண்டாம் இடத்தை கொக்குளாய் அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலையும், மூன்றாம் இடத்தை முத்துஐயன்கட்டு இடதுகரை அரசினர் தமிழ் கலவன் பாடசாலையும் பெற்றுக்கொண்டன.

19 வயது ஆண்கள் பிரிவில் முதலாம் இடத்தை புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரியும், இரண்டாம் இடத்தை முள்ளியவளை வித்தியானந்தா கல்லூரியும், மூன்றாம் இடத்தை முத்துஐயன்கட்டு இடதுகரை அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலையும் பெற்றுக்கொண்டன.

19 வயது பெண்கள் பிரிவில் முதலாம் இடத்தை புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரியும், இரண்டாம் இடத்தை கொக்குளாய் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையும், மூன்றாம் இடத்தை வள்ளிபுனம் கனிஷ்ட உயர் தர வித்தியாலயமும் பெற்றுக்கொண்டன.

இவற்றில் முதலாம், இரண்டாம், இடத்தைப்பெற்ற பிரிவுகள் ஆடிமாதம் இடம் பெறவுள்ள மாகாணமட்டப் போட்டியில் கலந்து கொள்ளும் 15 வயது பெண்கள் பிரிவிலும், 19வயது ஆண்கள், பெண்கள் பிரிவுகளிலும் முதலாம் இடங்களை புதுக்குடியிருப்பு மத்தியகல்லூரி பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (08)

# சென்றலைட்ஸ் வி.கழகம் சம்பியன்

மானிப்பாய் பரிஷ் விளையாட்டுக்கழகம் நடத்திய கிரிக்கெட் போட்டியில் சென்றலைட்ஸ் விளையாட்டுக்கழகம் சம்பியனாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

மானிப்பாய் இந்துக்கல்லூரி மைதானத்தில் இடம் பெற்ற இறுதிப்போட்டியில் சென்றலைட்ஸ் விளையாட்டுக்கழகமும், ஸ்ரான்லி விளையாட்டுக்கழகமும் மோதிக்கொண்டன.

முதலில் துடுப்பெடுத்தாடிய சென்றலைட்ஸ் கழகம் 31.2 பந்துப் பரிமாற்றங்களுக்கு அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 153 ஓட்டங்களைப் பெற்றனர்.


சென்றலைட்ஸ் அணி வீரர்களான விந்தன் 42, காண்டீபன் 15, றொசான் பிரகாஷ் தலா 13 ஓட்டங்களை ஆகக் கூடிய ஓட்டங்களாகப் பெற்றனர்.

பந்து வீச்சில் தனுஷ்காந் நான்கு இலக்குகளையும் மற்றும் குணதாஸ் பாஸ்கரன் ஆகியோர் தலா இரண்டு இலக்குகளையும் கைப்பற்றினார்கள். ஸ்ரான்லி விளையாட்டுக்கழகம் 37.4 பந்து பரிமாற்றங்களில் 150 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் அனைத்து இலக்கு களையும் இழந்தார்கள்.

சியாம்சன் 55 குணதாஸ் 30, சகதீபன் 13 ஓட்டங்களையும் ஆகக் கூடிய ஓட்டங்களாகப் பெற்றுக்கொண்டனர். சென்றலைட்ஸ் அணி சார்பில் பந்து வீசிய காண்டீபன் ஐந்துஇலக்கு களையும் கார்த்தீபன், பிரசாந் ஆகியோர் தலா இரண்டு இலக்குகளையும் கைப்பற்றினார்கள்.

சென்றலைட்ஸ் அணி வீரர்களான பிருந்தாபன் சிறந்த களத் தடுப்பாளராகவும் காண்டீபன் ஆட்ட நாயகனகாவும் போட்டியின் தொடர் நாயகனாக றொசானும் தெரிவு செய்யப்பட்டனர்.

ஸ்ரான்லி அணி வீரர்களான தனுஷ்காந் சிறந்த பந்துவீச்சு வீரனாகவும், சியாம்சன் சிறந்த துடுப்பாட்ட வீரனாகவும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். (41)



## சிந்தனைக்கு

தங்களுடைய உயிரையும், உடைமைகளையும் பாதுகாக்கும் சக்தி வாய்ந்த தேசிய இராணுவத்தின் உதவியுடன், சுதந்திர தமிழீழ நாடு நிறுவப்பட்டால் ஒழிய, ஒரு போதும் தமிழர்கள் பாதுகாப்பாகஇருக்கப் போவதில்லை

தமிழீழ தேசியத் தலைவர்.

ஈழநாதம்
மக்கள் நாளிதழ்
யாழ்.சாலை,கிளிநொச்சி. 25-05-2005
தொலைபேசி 060-2213244
தொலைநகல் 021-2283948
மின் அஞ்சல் natham23 ela@ yahoo.com

## மக்கள் மனங்களை வெல்ல...!

மீண்டும் எரிபொருளின் விலை அதிகரிக்கப்படலாம் என்ற எச்சரிக்கைச்சமிக்ஞைகள் வெளிப்படத்தொடங்கியுள்ளன. அடுத்த மாதம் முதல் வாரத்தில் இவ் அதிகரிப்பு ஏற்படலாம் எனவும் இது குறித்த தகவல்கள் தெரிவிக்கின்றன.

சர்வதேச சந்தையில் பெற்றோலியப் பொருட்களின் விலை ஏற்றத்திற்கு ஏற்ப எரிபொருட்களின் விலை உயர்த்தப்பட வேண்டும் எனவும் சிறிலங்கா பெற்றோலியக் கூட்டுத்தாபனம் கூறி வருவதோடு, மாதாந்தம் ஆயிரக்கணக்கான மில்லியன் ரூபாவிற்கு நட்டம் ஏற்படுவதாகவும் கூறிவருகின்றது.

சர்வதேச சந்தையில் கடந்த ஏழு எட்டு மாதங்களாக பெற்றோலியப்பொருட்களின் விலை அதிகரித்துச் சென்றுள்ளது என்பது உண்மையே. ஒரு பீப்பா மசகு எண்ணெய் 35 அமெரிக்க டொலரில் இருந்து 58 அமெரிக்க டொலர்கள் வரையில் கிடுகிடுவென உயர்வடைந்தது என்பதும் உண்மையே.

ஆனால் எண்ணெயின் விலை ஏறியது என்பது எவ்வளவு உண்மையோ இடையிடையே எண்ணெயின் விலையில் இறக்கமும் ஏற்பட்டதுண்டு. எடுத்துக்காட்டாக அண்மையில் இந்திய தொலைக்காட்சிக்கு (பொதிகை) விசேட பேட்டியளித்த இந்திய பெற்றோலியத்துறை அமைச்சர் மணிசங்கர் அண்மையில் பெற்றோலிய விலை 58 டொலராக ஏறியதாயினும், தற்பொழுது ஏற்பட்டுள்ள விலை வீழ்ச்சி மனதிற்கு ஆறுதல் அளிப்பதாகத், தெரிவித்தார். ஆனால் சிறிலங்காவில் சர்வதேச சந்தையில் பெற்றோல் விலை அதிகரிக்கும்போது விலையை அதிகரிப்பது போன்று உலக சந்தையில் எரிபொருள் விலை குறையும்போது எரிபொருள் விலைகளை இறக்குவதில்லை. மாறாக எப்பொழுதும் எரிபொருளின் விநியோகத்தில் பெரும் தொகைப் பகுதி இழப்பு ஏற்பட்டு வருதாகவும், பெற்றோலின் விலை அதிகரிக்கப்பட வேண்டும் என்றே பெற்றோலியக் கூட்டுத்தாபனம் கூறி வருகின்றது.

ஆகையினால் சர்வதேச சந்தையில் பெற்றோலின் விலை அதிகரித்ததோ, இல்லையோ இலங்கையில் பெற்றோலின் விலையை அதிகரிப்பதையே குறிக்கோளாகக் கொண்டு பெற்றோலியக் கூட்டுத்தாபனம் செயற்படுகின்றது. மக்கள் நலனில் அக்கூட்டுத்தாபனம் அக்கறை காட்டுவது இல்லை. அவ்வாறான அதிகரிப்பிற்குக் கடந்த கால நட்டத்தை ஈடுசெய்வதற்கெனக் காரணம் கூறி வருகின்றது. மாறாக சர்வதேச சந்தையில் பெற்றோலிய விலை அதிகரித்தபோதும், இந்திய அரசாங்கம் பெற்றோலியப் பொருட்களின் விலையை அதிகரிக்கவில்லை. பெற்றோலியப் பொருட்களின் விலை அதிகரிக்கப்பட வேண்டுமெனப் பல தடவை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் கோரியபோதும், அரசாங்கம் அதற்கான அனுமதியை வழங்கவில்லை. இதற்குக் காரணமும் இல்லாமல் இல்லை. இதற்கு கூட்டணி அரசாங்கத்திற்கு வெளியிலிருந்து ஆதரவளித்துவரும் இடதுசாரிகளின் கூட்டான எதிர்ப்பே இவ் விலையேற்ற அதிகரிப்பு ஏற்பட்டமைக்குக் காரணமாகும்.

அதாவது ஆளும் கூட்டணியின் பிரதான கட்சியான காங்கிரஸ் கட்சி பெற்றோலியப்பொருட்களின் விலை அதிகரிக்கப்பட வேண்டும் என்ற நிலைப்பாட்டுடன் இருந்தபோதும், இடதுசாரிகளான மார்சிஷ் கம்யூனிஸ்ட் கட்சி, கம்யூனிஸ்ட் கட்சி போன்றவை அதற்குக் கடும் கண்டனங்களைக் தெரிவித்தமையால் அப்பெற்றோலியப் பொருட்களின் விலையேற்றம் இதுவரை இடம்பெறவில்லை. அதாவது இடதுசாரிகள் மக்கள் மீது மேலும் பொருளாதாரச் சுமை ஏற்றப்படுதல் கூடாது என்ற உறுதியான நிலைப்பாட்டுடன் இருந்தமையால் அது சாத்தியமாகவில்லை. ஆனால் சிறிலங்காவின் ஆளும் கூட்டணியில் இடம்பெற்றிருந்த ஜே.வி.பி போன்ற கட்சிகள் இவ்விடயத்தில் எவ்வித அக்கறையும் காட்டவில்லை.

எதிர்க்கட்சியாக இருந்தபோது எரிபொருள் விலையேற்றத்திற்கும், பொருட்களின் விலையேற்றத்திற்கும் எதிராகப் போராட்டங்களை நடத்திவந்த ஜே.வி.பி யினர் ஆட்சி பீடம் ஏறிய பின்னர் இது தொடர்பாக மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளை மறந்து விட்டனர். இன்று நாட்டில் கிடுகிடுவென விலைவாசிகள் ஏறிச்செல்கின்றபோதும் அது குறித்து அவர்கள் எதுவும் கதைப்பதில்லை. போராடப்போவதாகத் தெரிவிப்பதும் இல்லை.

மாறாக எரிபொருள்விலையேற்றம், அத்தியாவசியப் பொருட்களின் விலையேற்றம் என்பனவற்றில் இருந்து மக்களின் கவனத்தைத் திசைதிருப்புவதற்காக சுனாமி அனர்த்த பொதுக் கட்டமைப்பிற்கு எதிராகவும், புலிகளுக்கு எதிராகவும் குரல் எழுப்புகின்றனர். இதன் மூலம் இனவாதத்தைத் தூண்டித் தமது ஆட்சி அதிகாரத்தைத் தக்கவைத்துக்கொள்ள முற்பட்டு நிற்கின்றனர். தங்கள் தேர்தல் வாக்குறுதிகளை மக்கள் மனங்களில் இருந்து மறைத்து விடப் பார்க்கின்றனர்.

# யாழ்.போதனாவைத்தியசாலையில் வைத்திய நிபுணர்கள் பற்றாக்குறை!

### -முக்கிய பல சேவைகள் இடம்பெறுவதில்லை

(யாழ்ப்பாணம்)

யாழ்.போதனா வைத்தியசாலையில் முக்கியமான பல வைத்திய சேவைகளை வழங்குவதற்கு ஏற்ற வைத்திய நிபுணர்கள் பற்றாக்குறை காணப்படுவதாக யாழ்.போதனா வைத்தியசாலையின் நிர்வாக அதிகாரிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

குறிப்பாக யாழ்.போதனா வைத்தியசாலையின் சிறப்பு வைத்திய நிபுணத்துவ சேவைகளை வழங்குவதற்கு 32 வைத்திய நிபுணர்கள் தேவப்படுகின்றபோதும், இங்கு 16 வைத்திய நிபுணர்களே கடமையாற்றுகின்றனர்.

நரம்பியல் சிகிச்சை நிபுணர்கள், கதிர்ச்சிகிச்சை நிபுணர்கள், இருதய நோய் சிகிச்சை நிபுணர்கள், சிறுநீரக சத்திரசிகிச்சை நிபுணர்கள், பிளாஸ்ரிக் சிகிச்சை நிபுணர்கள், தோல் சிகிச்சை நிபுணர்கள் என 16 வகையான சிகிச்சைகளுக்கு நிபுணர்கள் எவரும் இதுவரையில் நியமிக்கப்படவில்லை.

இதனால் இவ்வாறான நோய்களுக்கிலக்காவோரை சிகிச்சைகளுக்காக கொழும்பு தேசிய வைத்தியசாலைக்கு எடுத்துச்செல்ல வேண்டிய நிலை உள்ளதாகவும் மேலும் தெரிவிக்கப்படுகிறது. (33)

# சனாதிபதி கையொப்பமிடுவதில் தாமதம்; வெசாக் தினத்தில் கைதிகள் விடுவிப்பில்லை!

(கொழும்பு)

வெசாக் பூரணை தினத்தை முன்னிட்டு கைதிகளை விடுவிக்கும் நடைமுறை சிறிலங்காவில் இருந்து வருகின்ற போதும் இந்த ஆண்டு இடம்பெறவில்லை.

வெசாக் தினத்தை முன்னிட்டு சிறு குற்றங்களுக்காக சிறைவைக்கப்பட்டுள்ள சுமார் 1500 கைதிகள் விடுவிக்கப்படவிருந்தனர். இதனை முன்னிட்டு சிறைச்சாலைத் திணைக்களம் தகுதியுள்ள கைதிகளின் பட்டியலையும் சனாதிபதிக்கு அனுப்பியிருந்தது. எனினும் சனாதிபதி இதுவரை அதில் கையொப்பம் இடவில்லை. இதன் காரணமாகவே கைதிகளின் விடுதலை தாமதமாகியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.(32)

# தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம் இனவாதக் கருத்துக்களை விதைக்கிறது

### -ஹெல உறுமய பாராளுமன்ற உறுப்பினர் கண்டனம்-

(கொழும்பு)

தேசப்பற்றுள்ள தேசிய இயக்கமானது இலங்கையில் தற்சமயம் இனவாதக் கருத்துக்களை முன்வைக்கும் இயக்கமாக செயற்பட்டு வருவதாகவும், அதன் தலைவராக செயற்படும் எல்லே குணவன்ச தேரர் மக்களால் ஏற்றுக் கொள்ள முடியாதவர் எனவும் ஜாதிக ஹெல உறுமயவின் பாராளுமன்ற உறுப்பினர் அத்துரலியே ரத்னதேரர் தெரிவித்துள்ளார். எல்லே குணவன்ச தேரர் நிலையான கொள்கை இல்லாதவர். தலைமைத்துவத்திற்கு பொருத்தமில்லாத அவரிடம் தேசப்பற்றுள்ள அமைப்பின் பொறுப்பு வழங்கப்பட்டுள்ளமை யதார்த்தமற்றது என்றும் அத்துரலியே ரத்னதேரர் தெரிவித்துள்ளார்.

இந்த நிலையில் குறித்த எல்லே குணவன்சவின் ஆலோசனைகளின் அடிப்படையில் செயற்படும் ஜே.வி.பி.யின் பிரசார செயலர் விமல் வீரவன்சவையும் அத்துரலியே ரத்னதேரர் விமர்சித்துள்ளார். விமல் வீரவன்ச எல்லே குணவன்சவின் ஆலோசனையைக் கேட்பதன் மூலம் அழிவுக்கு சென்று கொண்டிருப்பதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். விமல் வீரவன்ச தேசப்பற்றுள்ள தேசிய இயக்கத்தின் முக்கிய பிரமுகராகவும் செயற்பட்டு வருகிறார். தமிழீழ விடுதலைப் புலிகளின் செயறபாடுகளை ஜே.வி.பி கூட்டத்தில் விமர்சிப்பதைக் காட்டிலும் தேசப்பற்றுள்ள தேசிய இயக்கத்தின் கூட்டத்திலேயே அதிகமாக விமர்சிப்பதை வழமையாகக் கொண்டிருக்கிறார் எனவும் அத்துரலியே ரத்னதேரர் தெரிவித்துள்ளார்.

# இனப்பிரச்சினைத் தீர்வுக்கு பேச்சுவார்த்தையே சிறந்த வழி

### -சனாதிபதி சந்திரிகா கூறுகிறார்

(கொழும்பு)

இனப்பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்கு பேச்சுவார்த்தையே சிறந்த வழியாகும் என சனாதிபதி வலியுறுத்தியுள்ளார்.

பௌத்த தர்மமும் இதனையே போதிப்பதாகக் குறிப்பிட்ட சனாதிபதி பௌத்த மத கோட்பாடுகளின்படி எந்தவொரு வன்முறை சார்ந்த அமைப்பையும் அன்பினால் மாற்றிவிட முடியும் என்றும் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

வெசாக் பண்டிகையை முன்னிட்டு நேற்று முன்தினம் சனாதிபதி மாளிகையில் இடம்பெற்ற விசேட வைபவத்திலேயே உரையாற்றிய சனாதிபதி இந்தக் கருத்தை வெளியிட்டுள்ளார்.

இனப்பிரச்சினைக்கு வன்முறை மூலம் தீர்வு காண முடியாது. பேச்சுவார்த்தையே அதற்கு சிறந்த வழியாகும் என்றும் சனாதிபதி தெரிவித்தார். (32)

# பொதுக்கட்டமைப்புக் குறித்த ஒப்பந்தம் பத்துத் தினங்களுக்குள் கைச்சாத்து

### -அவுஸ்.சிங்கள செய்தி இதழ் கூறுகின்றது

(கொழும்பு)

பொதுக்கட்டமைப்புத் தொடர்பான ஒப்பந்தம் இன்னும் பத்துத் தினங்களுக்குள் கைச்சாத்திடப்படும் என அவுஸ்திரேலியாவில் இருந்து வெளியாகும் ஒரே ஒரு சிங்கள செய்தி இதழான (திவஸ) தெரிவித்துள்ளது. எவர் எதிர்த்தாலும், குறை கூறினாலும் பொதுக்கட்டமைப்பு அமைக்கப்படும் என இந்த இதழ் குறிப்பிட்டுள்ளது. ஜே.வி.பி இந்த பொதுக்கட்டமைப்புக்கு தமது எதிர்ப்பை வெளியிட்டு வருகிறது. அதனைத்தாம் ஒருபோதும் அமைக்க இடம்தரமுடியாது என ஜே வி.பி தெரிவித்து வருகிறது. இந்த நிலையில் தாம் பொதுக்கட்டமைப்பு விடயத்தில் உறுதியாக உள்ளதாக சனாதிபதி தெரிவித்துள்ளார். இதனை எதிர்ப்பவர்கள் யதார்த்தம் புரியாத முட்டாள்களாகவே இருப்பர் என அவர் குறிப்பிட்டுள்ளார். இதேவேளை ஜே.வி.பி இந்த விடயத்தில் இணங்கி வரவேண்டும் என்பதற்காக பல்வேறு குற்றச்சாட்டுகளையும் சுமத்திவருகிறார். தமது கணவர் விஜயகுமாரதுங்கவை கொலை செய்தது ஜே.வி.பி.யே என்றும் அவர் அண்மையில் குற்றம் சுமத்தியிருந்தார். இது ஜே.வி.பி பொதுக்கட்டமைப்புக்கு இணங்கி வராவிட்டால் என்ன நடக்கும் என்பதற்கான எச்சரிக்கையாகும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### -2500 ரூபா சம்பள உயர்வை-

# அடிப்படைச் சம்பளத்துடன் இணைக்காமைக்கு சுகாதார ஊழியர்கள் போராட முடிவு!

(கொழும்பு)

அரசாங்கத்தால் அதிகரிக்கப்பட்டுள்ள 2500ரூபா இதுவரை அடிப்படை சம்பளத்திற்கு சேர்க்கப்படாதபடியால் வடகிழக்கு வடமத்திய மாகாண சுகாதார ஊழியர்கள் எதிர்வரும் 26ஆம் 27ஆம் திகதிகளில் வேலைநிறுத்தத்தில் ஈடுபடப் போவதாக- சுகாதார ஊழியர்சங்கம் சுகாதார அமைச்சுக்கு அறிவித்துள்ளது.

ஏனைய சுகாதார ஊழியர்களுக்கு அதிகரித்த 2500ரூபா அடிப்படை சம்பளத்துடன் சேர்க்கப்பட்டுள்ளதாகவும், இந்த இரு மாகாணங்களைச் சேர்ந்தவர்களுக்கு இடைக்காலக் கொடுப்பனவாக 2500ரூபா வழங்கப்படாததற்கு எதிர்ப்புத் தெரிவித்து தொழிற்சங்கம் நடவடிக்கை மேற்கொள்ளப்போவதாக சுகாதார ஊழியர் சங்கம் தெரிவித்துள்ளது.

# பொத்துவில் இன்ஸ்பெக்டர் ஏத்த கொலை; சிறிலங்கா அதிரடிப் படை மீது சந்தேகம்!

## -மக்கள் அச்சத்தால் இடம்பெயர்வு

(மட்டக்களப்பு)

பொத்துவில் இன்ஸ்பெக்டர் ஏத்த மெனுமிடத்தில் தூக்கிலிடப்பட்ட நிலையில் ஆணின் சடலம் ஒன்று மீட்கப்பட்டுள்ளதை அடுத்து அப்பகுதி மக்கள் அச்சம் காரணமாக இடம் பெயர்ந்துள்ளனர். மேற்படி அடையாளம் காணப்படாத நபரின் கொலைக்கு சிறிலங்கா அதிரடிப் படை யினரே காரணம் என இப்பகுதி மக்கள் சந்தேகமடைந்த நிலையிலேயே ஊரைவிட்டு இடம் பெயர்ந்துள்ளனர்.

சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்கள் இன்ஸ்பெக்டர் ஏத்தத்திலுள்ள அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலைக்கு அருகில் முகாமமைத்து தங்க வைக்கப்பட்டிருந்தனர்.

இவர்களுக்கு அருகில் சிறிலங்கா அதிரடிப் படையினரின் முகாமுள்ளது. இவ்வதிரடிப் படையினர் இடைத்தங்கல் முகாமிலுள்ள பெண்களை பல்வேறு தொந்தரவுக்குள்ளாக்கி வந்த நிலையில் கடந்த 20ஆம் ·திகதி அடிகாயங்களுடன் தூக்கில் தொங்கிய நிலையில் ஒரு ஆணின் சடலம் மீட்கப்பட்டது.

அடையாளம் காணப்படாத இந்த ஆண் 35 வயது மதிக்கத்தக்கவர் என்றும், நீலநிற அரைக்கைச் சேட், கறுப்புநிற நீளக்காற்சட்டை அணிந்திருந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது. இவரது மரணத்தில் அதிரடிப் படையினரே சம்பந்தப்பட்டிருக்கலாமென சந்தேகிக்கும் மக்கள் ஊரைவிட்டு இடம் பெயர்ந்துள்ளனர்.

# அமெ.முன்னாள் சனாதிபதி கிளிங்டன் வரும் வெள்ளி கொழும்பு வருகை

(கொழும்பு)

முன்னாள் அமெரிக்க சனாதிபதி பில் கிளிங்டன் எதிர்வரும் 27 ஆம் திகதி இலங்கை வரவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகம் கொபிஅனானின் விசேட பிரதிநிதியாக பதவி ஏற்றதன் பின் முதல் முறையாக இலங்கைவரும் முன்னாள் அமெரிக்க சனாதிபதி ஆழிப்பேரலைகளால் பாதிக்கப்பட்ட இலங்கையின் கரையோரப் பிரதேசங்களுக்கு விஜயம் செய்வார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சுனாமிபுனர்நிர்மாணப் பணிகள் தொடர்பான ஐக்கிய நாடுகளின் விசேட பிரதிநிதி என்றவகையில் முன்னாள் அமெரிக்க சனாதிபதி பில் கிளிங்டன் கடந்த 16 ஆம் 17 ஆம் திகதிகளில் கண்டியில் நடைபெற்ற இலங்கைக்கு உதவிவழங்கும் நாடுகளின் மாநாட்டில் கலந்து கொள்வதாக இருந்தபோதும் பின்னர் உடல் நிலை பாதிக்கப்பட்டமையால் ஒலிப்பதிவு செய்த உரை ஒன்றை அனுப்பியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (32)

# நினைவுக்கல் திரை நீக்கம்

மாங்குளம் பகுதியில் ஜெயசிக்குறு இராணுவ நடவடிக்கையில் கடந்த 29.09.1998 அன்று வீரச்சாவடைந்த வீரவேங்கை அன்பரசன் (பெருமாள் ஜெகேந்திரன் சாவகச்சேரி. தற்போதைய முகவரி மயில்வாகனபுரம் பிரமந்தனாறு விசுவமடு) என்ற மாவீரரின் நினைவுக்கல் திரை நீக்கம் இன்று விசுவமடு மாவீரர் துயிலும் இல்லத்தில் பூரண இராணுவ மரியாதைகளுடன் நடைபெறும்.

முன்னதாக இம்மாவீரனின் திருவுருவப்படம் நேற்று அவரது தற்காலிக இல்லத்தில் இறுதி வணக்கத்திற்காக வைக்கப்பட்டது இன்று ஊர்வலமாக எடுத்து வரப்பட்டு பிரமந்தனாறு மகா வித்தியாலயத்தில் மக்களின் வணக்கத்திற்காக திருவுருவப்படம் வைக்கப்பட்டு தொடர்ந்து விசுவமடு மாவீரர் துயிலும் இல்லத்தில் நினைவுக்கல் திரை நீக்கம் செய்துவைக்கப்படும்.

# படையினரின் முகாம்களின் முன் சோதனைக் கெடுபிடிகள் அதிகரிப்பு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பில் படைமுகாம்களுக்கு முன்னால் படையினர் பொதுமக்கள் மீதான கொடுபிடிகளை அதிகரித்துள்ளனர்.

மட்டக்களப்பில் படையினரின் வீதித்தடை சோதனைக் கெடுபிடிகள் தற்போது அதிரித்து வருவதாக அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன. இதனால் பொதுமக்கள் பல்வேறு அசௌகரியங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

கல்லடிப்பாலம், வாழைச்சேனை, மட்டக்களப்பு வீதியில் சத்துருக்கொண்டான், செங்கலடி, ஆரயம்பதி, புதுக்குடியிருப்பு, வவுணதீவு ஆகிய இடங்களிலுள்ள படையினரின் முகாங்களின் எதிரே வீதித் தடைகள் அமைக்கப்பட்டு சோதனை நடவடிக்கைகளும் அதி கரிக்கப்பட்டுள்ளன

## கட்டளை...

டியர் லக்சிறி அமரதுங்க இப் பொறுப்பு வகித்தார்.சிறிலங்கா இராணுவ தலைமையகம் இச்செய்தியை வெளியிட்டுள்ளது. (32)

## தென்மராட்சியில்...

உண்ணாவிரதப் போராட்டங்களும் நடத்தப்படவுள்ளன.

இது குறித்த தென்மராட்சி நலன்புரிச்சங்க ஒழுங்கமைப்பில் மாநாடு ஒன்று நேற்றுக் காலை மிருசுவில் றோமன் கத்தோலிக்க பாடசாலையில் நடைபெற்றது.

இதில் தமிழ் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்களான ரவிராஜ், சிவாஜிலிங்கம், பத்மினி சிதம்பரநாதன், சிவநேசன் ஆகியோரும் இடம் பெயர்ந்தோர் அமைப்புகள் உள்ளிட்ட பொதுஅமைப்புகளின் பிரதிநிதிகள் பலரும் கலந்து கொண்டு மேற்படி தீர்மானங்களை எடுத்தனர்

(33,28,27)

## திருமலையில்...

உதவியாளரான யசோ என்னும் பெயரையுடைய பொதுமகன் ஒருவரும் தமது கடமையின் நிமித்தம் உவர்மலை நோக்கிச் சென்றபோது தபால் நிலையச்சந்தியிலிருந்து சிறிலங்கா விசேட கொமாண்டோப் படையினர் ஜீப் வாகனமொன்றில் இவர்களைப் பின்தொடர்ந்து சென்றுள்ளனர். இவர்கள் உவர்மலையின் கடற்கரை வீதியூடாகச் சென்று கொண்டிருந்தவேளை ஹராபர் வியூ உணவகத்திற்கு அருகில் சுமார் 25இற்கும் மேற்பட்ட உந்து ருளிகளில் வந்தகொமாண்டோப் படையினர் இவர்களை சுற்றிவளைத்து குபேரன் என்ற போராளியின் தலையில் கைத்துப்பாக்கியை வைத்து "இனிமேல் திருமலையில் நடமாடினால் உம்மைச் சுடுவோம்" என்றும் இதனைப் பற்றி கண்காணிப்புக் குழுவுக்குச் சொன்னாலும் சரி, ஐ.சி.ஆர்.சி.க்கு கூறினாலும் சரி எமக்குப் பயமில்லை ஆனால் உம்மைச் சுடுவது மட்டும் நிச்சயமென தமிழில் பேசி அச்சுறுத்தியுள்ளனர்.

எமது போராளிகள் திரும்பிவரும்போதும் தங்களது அலுவலகம் வரை இராணுவத்தினரும் பின்தொடர்ந்துவந்துள்ளனர். இச்சம்பவமானது எமது போராளிகள் நிராயுத பாணிகளாக நடமாடி அரசியல் வேலைகளில் ஈடுபடுவதற்கு எதிராக விடுக்கப்பட்ட பாரிய அச்சுறுத்தல் என்பதுடன் இது ஒரு அப்பட்டமான யுத்த நிறுத்த மீறல் என்பதையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

மேலும் இவ்வாறான சம்பவங்களில் படையினர் ஈடுபடுவதானது திருகோணமலையில் தமிழீழ விடுதலைப்புலிகளுக்கும், அரச படையினருக்குமிடையிலான நல்லுறவுகள் குலைக்கப்படுவதற்கும் காரணமாக அமையலாம். என்பதையும் வருத்தத்துடன் அறியத்தருகின்றோம் எனவே இவ் விடயங்களை தாங்கள் கருத்தில்கொண்டு தகுந்த விசாரணைகளை நடாத்துவதுடன் இச்சம்பவத்தை யுத்தநிறுத்த மீறலாகப் பதிவு செய்து இவ்வாறான சம்பவங்கள் தொடர்ந்து நடைபெறாமல் இருக்கும்படி கவனித்துக்கொள்ளவும் எனவும் கேட்டுக்கொள்கின்றோம்.

# திருமலை பதற்ற நிலவரம் தொடர்பாக கண்காணிப்புக்குழு-பொலிசாருடன் பேச்சு!

(திருமலை)

போர்நிறுத்தக்கண்காணிப்புக் குழுவின் திருகோணமலைக் கண்காணிப்பாளர்கள் நேற்று முன்தினம் திங்கட்கிழமை மாலை கிழக்குப் பிராந்திய பிரதிப் பொலிஸ் மா அதிபர் மற்றும் திருகோணமலை சிரேஷ்ட பொலிஸ்மாதிபர் ஆகியோருடன், சர்ச்சைக்குரிய புத்தர் சிலை தொடர்பாக திருகோணமலை நகரிலும், அதன் புறநகர்ப் பகுதிகளிலும் ஏற்பட்டுள்ள பதற்ற நிலவரம் குறித்து பேச்சுவார்த்தை நடத்தினர் என்று கண்காணிப்புக்குழு வட்டாரங்கள் தெரிவித்தன.

புத்தர்சிலை அகற்றப்பட வேண்டும் என்று கோரி திருகோணமலை நகரில் ஹர்த்தால் நடந்தபோது இடம் பெற்ற அசம்பாவிதங்களை அடுத்து சில புறநகர்ப் பகுதிகளிலிருந்து அச்சம் காரணமாக குடும்பங்கள் சில இடம்பெயர்ந்திருப்பதாக வெளியான தகவல் களைப் போர்நிறுத்தக்கண்காணிப்புக்குழுவினர் பொலி சாரின் கவனத்திற்குக் கொண்டுவந்தனர். என்றும், மக்களுக்குப் போதுமான பாதுகாப்பு வழங்க எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் பற்றியும், கண்காணிப்புக்குழுவினர் பொலிசாரிடம் விசாரித்து அறிந்து கொண்டனர் என்றும் குழுவட்டாரங்கள் தெரிவித்தன.

திருகோணமலை நகரில் பதற்றநிலையைத் தணித்து, மக்களுக்குப் பாதுகாப்பை வழங்குவதற்கு மேலதிகமாக 750 பொலிசார் வெளி மாவட்டங்களிலிருந்து தருவிக்கப்பட்டு சேவையிலீடுபடுத்தப்பட்டுள்ளனர் என்றும் பொலிஸ் அதிகாரிகள் கண்காணிப்புக்குழுவினருக்குத் தெரிவித்ததாகவும் குழுவட்டாரங்கள் தெரிவித்தன.

திருகோணமலைநகரில் அமைதியை நிலைநாட்டுவதற்கும், அசம்பாவிதங்களைத் தடுப்பதற்கும் அனைத்து பாதுகாப்பு நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டிருப்பதாகவும், பொலிஸ் அதிகாரிகள் போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவினரிடம் தெரிவித்தனர்.

இதேவேளை திருகோணமலை நகரிலும், புறநகர்ப் பகுதிகளிலும், திங்கட்கிழமை இரவு அசம்பாவிதங்கள் ஏதும் இடம்பெறவில்லை என்று பொலிஸ் வட்டாரங்கள் கூறின. (25)

## ஆனந்தி பணி ஓய்வு



கடந்த முப்பது ஆண்டுகளுக்கு மேலாக பி.பி.சி தமிழோசையில் பணிபுரிந்து வந்த மூத்த தயாரிப்பாளர் ஆனந்தி சூரியப்பிரகாசம் நேற்றுத் தமது பணியிலிருந்து ஓய்வுபெற்றார்.

1970 களில் பி.பி.சி தமிழோசையில் பகுதிநேர தயாரிப்பாளராக பணிபுரியத் தொடங்கிய ஆனந்தி 80 களில் முழு நேரத் தயாரிப்பாளரானார். இவரது பல தொடர்கள் முக்கிய நபர்களுடனான பேட்டிகள் தமிழோசை நேயர்களிடையே பிரபலம் பெற்றவை.

## -பொதுக்கட்டமைப்பினை எதிர்க்கும்-

# ஜே.வி.பி யினரைக் கைது செய்ய சனாதிபதி இரகசிய உத்தரவு

பொதுக்கட்டமைப்புத் தொடர்பில் எதிர்ப்பினை வெளியிடும் ஜே.வி.பி உறுப்பினர்களைக் கைது செய்து நீதிமன்றத்தில் ஆஜர் செய்யுமாறு சனாதிபதி பொலிசாருக்கு இரகசிய உத்தரவு ஒன்றைப் பிறப்பித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

உத்தேச பொதுக்கட்டமைப்பு உருவாக்கப்படும் விடயத்தில் சனாதிபதியுடன் இணக்கப் போக்கினை கடைப்பிடிக்க ஜே.வி.பி யின் ஒரு தரப்பினர் இணங்கியுள்ளதாகவும் இதற்கு எதிராக செயற்படும் உறுப்பினர்களைக் கைது செய்து சிறை வைப்பதன் மூலம் பொதுக்கட்டமைப்பிற்கு எதிரான நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்த முடியும் என்று சனாதிபதி கருதுவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

பொதுக்கட்டமைப்பிற்கு எதிரான நிலைப்பாட்டினைக் கொண்டுள்ள ஜே.வி.பி யினர் பொலிசாரினால் நெருககமாகக் கண்காணிக்கப்பட்டு வருவதாகவும் சுட்டிக்காட்டப்படு கின்றது.

சனாதிபதி இந்தியப் பயணத்தை நிறைவு செய்து கொழும்பு திரும்பிய பின்னர் பொதுக்கட்டமைப்புத் தொடர்பான உத்தியோகபூர்வ முடிவு அறிவிக்கப்படலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.

பொதுக்கட்டமைப்பை எதிர்ப்பதன் மூலம் அரசாங்கம் கவிழ்ந்து மீண்டும் ஒரு தேர்தல் நடத்தப்படுவதை ஜே.வி.பி யின்ஒருபகுதியினர் விரும்பவில்லை என்றும் மீண்டும் தேர்தல் ஒன்று நடத்தப்பட்டால் அதில் ஐக்கிய தேசியக் கட்சி வெற்றி பெறும் வாய்ப்பு அதிகம் என்பதால் அவ்வாறான நிலை ஒன்று ஏற்படாமல் தடுக்கும் வகையில் இணக்கப்பாட்டு அரசியலை நடத்த ஜே.வி.பி யின் ஒரு தரப்புத் தயாராகி வருவதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது. (32)

# பல்வேறுகோரிக்கைகளுடன் ஆசிரியர்கள் சனாதிபதிமாளிகை முன்ஆர்ப்பாட்டம்

## -மே 31 இல் நடாத்த ஏற்பாடு

பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து நாடளாவியரீதியிலுள்ள ஆசிரியர்கள் சனாதிபதி மாளிகைக்கு முன்னால் ஆர்ப்பாட்டமொன்றை நடாத்துவதற்கு தீர்மானித்துள்ளனர்.

ஆசிரியர்களின் பதவியுயர்வு மற்றும் சம்பளயுயர்வு போன்ற பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து எதிர்வரும் 31ஆம் திகதி சனாதிபதி மாளிகைக்கு முன்னால் ஆர்ப்பாட்டமொன்றில் ஈடுபடவிருப்பதாகவும், கொழும்பு விஹாரமாதேவி பூங்காவில் ஒன்றுகூடவிருக்கும் ஆசிரியர்கள் ஊர்வலமாக சனாதிபதி மாளிகைக்குச் செல்லவிருப்பதாக கல்விசார் ஊழியர்களின் கூட்டமைப்பு அறிவித்துள்ளது. நீண்டகாலமாக ஆசிரியர்கள் எதிர்நோக்கிவரும் பதவியுயர்வு மற்றும் சம்பள உயர்வு தொடர்பான பிரச்சினைகள் குறித்து சனாதிபதிக்கு அழுத்தங்கொடுக்கும் நோக்கிலேயே இந்த ஆர்ப்பாட்டத்தைத் தாம் ஏற்பாடு செய்திருப்பதாக கல்விசார் ஊழியர்களின் கூட்டமைப்பின் செயலாளர் வசந்த தர்மசிறி தெரிவித்துள்ளார். இதேவேளை, 40ஆயிரத்திற்கும் மேற்பட்ட ஆசிரியர்கள் இதுவரை பதவியுயர்வுகளை கல்வியமைச்சு வழங்கத் தவறியமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து ஜே.வி.பீ சார்புடைய ஆசிரியர் சங்கம் எதிர்வரும் 26ஆம் திகதி எதிர்ப்பார்ப்பட்டமொன்றை நடாத்தவிருப்பதாக ஏற்கனவே அறிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## இலங்கையின்...

சர்வதேச நிதியுதவிகள் மூலமான திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படும் வேகம் மிகவும் குறைவாக இருப்பது குறித்து சர்வதேச நாடுகளும். உதவி அமைப்புகளும் விசனமடைந்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

## புரிந்துணர்வு

சம்பவங்கள இடம்பெறும்போது அங்குசென்று தம்மால் விசாரணைகளை நடாத்தமுடியாதிருப்பதாகவும் குறிப்பிட்டுள்ளார்

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2005 ஆம் ஆண்டு மே மாதம் 25ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.